தமிழ்

# பாலபாரதி

## வகுப்பு மூன்று



# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி- மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

**தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.**

## மனோதர்பன்

**வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.**

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாட நிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இந்தப் பாடநூல், இந்நிறுவனத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண்: அபயாஸ்-2116/(ப்ர எண் 43/16) எஸ்டி-4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 13/04/2026 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2026-2027 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்
# பாலபாரதி
## வகுப்பு மூன்று



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R.Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதினால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி-ஒளி வடிவிலான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு : 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம் இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப் பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

## தமிழ் மொழிக்குழு

**திருமதி. பானுமதி சங்கர்,** குழுதலைவர்
**திருமதி. கீதா கிறிஸ்டோபர்,** உறுப்பினர்
**திருமதி. சித்ரா பாலசுப்ரமணியன்,** அழைப்பு உறுப்பினர்
**திருமதி. மரிய வசந்தா சேவியர்,** அழைப்பு உறுப்பினர்
**திரு. ஜெரோம் ஜெயசிங்,** அழைப்பு உறுப்பினர்
**திரு. டேவிட் கிருபா சுவாமிதாஸ்,** அழைப்பு உறுப்பினர்
**திரு. ரெ. சிவா,** சிறப்பு பங்களிப்பு
**முனைவர் துலசி பாரத் பூஷண்,** உறுப்பினர் - செயலாளர் (C.B)

### மறு ஆய்வு:

**திருமதி. எஸ். செந்தாமரை செல்வி** (மதிப்பாய்வு)
**திரு. எஸ். ஏ. கனகராஜ்** (சட்ட நிபுணர்)
**டாக்டர் ஜெயந்தி நாராயணன்** (CWSN நிபுணர்)

### ஒருங்கிணைப்பு:

**முனைவர் துலசி பாரத் பூஷண்**
சிறப்பு அதிகாரி - தெலுகு (C.B)
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் கழகம்,
புனே.

### அச்சுக்கோர்ப்பு:

**செவன் ஸ்டார் என்டர்பிரைஸஸ்,**
புனே

காகிதம் : 70 GSM Creamwove
பதிப்பு ஆணை எண் :
பதிப்பாளர் :

### அட்டைப் படம்:

**திரு. பட்டு இராமதாஸ் பாக்லே**

### படங்கள்:

**திரு. சுகாஸ் ஜக்தாப்**
**திரு. ஸ்ரீநிவாஸ் கண்டூரி**

### தயாரிப்பு :

**திருமதி. மித்தாலி ஷித்தப்**
I/C முதன்மை அதிகாரி
**திரு. இராஜேந்திர பாண்டுலுஸ்கர்**
தயாரிப்பு அதிகாரி

### வெளியிடுவோர் :

**திரு. ஹேமந்த் வி. பாபர்**
I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் தயாரிப்புக் கழகம்,
மும்பை - 400025.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4 **A**

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முன்னுரை

**அன்பு மாணவச் செல்வங்களே,**

புதிய கல்வி ஆண்டு தொடங்கியுள்ளது. 3-ஆம் வகுப்பிற்கான தமிழ் பாலபாரதி எனும் இப்பாடநூலை உங்கள் கைகளில் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்பு மாணவர்களே, 1 மற்றும் 2-ஆம் வகுப்புகளில் பயின்றபோதே நீங்கள் வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டு விட்டீர்கள்; இப்போது நீங்கள் 3-ஆம் வகுப்பில் அடியெடுத்து வைத்துள்ளீர்கள். தமிழ் மொழிக்கான இப்பாடநூலை வாசிக்க நீங்கள் மிகுந்த ஆவலுடன் இருப்பீர்கள் என நம்புகிறேன். அதே ஆவலுடன், இப்பாடநூலை திறவுங்கள். வாசியுங்கள். இப்பாடநூல் நிச்சயமாக உங்களுக்கு பிடிக்கும்.

இப்பாடநூலில் பாடங்கள், படக்கதைகள் மற்றும் காட்சி விளக்கங்களின் அற்புதமான தொகுப்பு இடம் பெற்றுள்ளது. இவற்றை நீங்கள் வாசிக்கும்போது, அவற்றைப் பற்றி சிந்திப்பீர்கள்; கலந்துரையாடல்களில் ஈடுபடுவீர்கள்; கேள்விகள் கேட்பீர்கள்; மேலும், அப்பாடப்பொருள் குறித்த உங்கள் சொந்த எண்ணங்களையும் அனுபவங்களையும் வெளிப்படுத்துவீர்கள். இவற்றின் மூலம், நீங்கள் பல புதிய விஷயங்களைக் கண்டறிந்து கற்றுக்கொள்வீர்கள். இப்பாடநூலில் இடம் பெற்றுள்ள கவிதை வரிகளைத் தாளலயத்துடன் வாசிக்கலாம்; மேலும், உணர்ச்சி பூர்வமான உடல் அசைவுகளுடன் நடித்துக்காட்டவும் செய்யலாம். இக்கவிதைகளை வாசிப்பதிலும், உரக்கச் சொல்வதிலும், உங்கள் நண்பர்களுடன் இணைந்து பாடுவதிலும் நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியைப் பெறுவீர்கள்.

பாடங்கள், கவிதைகள், காட்சி விளக்கங்கள், படக்கதைகள் மற்றும் பல்வேறு செயல் பாடுகளுக்குத் துணையாக, இப்பாடநூல் முழுவதும் வழங்கப்பட்டுள்ள அழகான, வண்ண மயமான மற்றும் உயிரோட்டமான ஓவியங்களை நீங்கள் நிச்சயமாக விரும்புவீர்கள். சூழலுக்கு ஏற்றவாறு வரையப்பட்டுள்ள இவ்விளக்கப்படங்கள், நீங்கள் வாசித்த பாடப் பகுதிகளை நீண்ட காலத்திற்கு உங்கள் நினைவில் தக்க வைத்துக் கொள்ள உதவும். இப்பாடநூலில் பல்வேறு தலைப்புகளின் கீழ் பட்டியலிடப்படுள்ள செயல்பாடுகளை நிறைவு செய்வதன் மூலம், உங்கள் மொழித்திறன்கள் மேலும் மேம்படுத்தப்பட்டு வளர்த்தெடுக்கப்படும். மேலும் உங்கள் சொல் வளமும் மொழிசார் திறன்களும் விரிவடையும்.

இப்பாடநூலின் வாயிலாக, நீங்கள் சரளமாக வாசிக்கக் கற்றுக்கொள்வீர்கள்; மேலும் துல்லியத்துடனும், தெளிவுடனும் எழுதுவதிலும், பேசுவதிலும் திறமை பெறுவீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் தன்னம்பிக்கையுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் திறன் பெறுவீர்கள். வீட்டில், பள்ளியில் மற்றும் சமூகத் தினருடன் பழகும் போதும் பேசும் போதும் தமிழ் மொழியை திறம்பட பயன்படுத்த நீங்கள் கற்றுக்கொள்வீர்கள். அன்பு மாணவச் செல்வங்களே, தமிழ் மொழியை வாசியுங்கள், புரிந்து கொள்ளுங்கள், பேசுங்கள், எழுதுங்கள் மற்றும் மகிழ்ச்சியுடன் கற்றுக்கொள்ளுங்கள்!

உங்கள் கல்விப்பயணத்திற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

**(அனுராதா ஓக்)**
இயக்குநர்
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் தயாரிப்பு
மற்றும் கலைத்திட்ட ஆராய்ச்சி நிறுவனம், புனே.

புனே.
தேதி: 19, ஏப்ரல் 2026
இந்திய சூரிய நாட்காட்டி:
2 வைஷாக், 1948 அக்ஷயதிருதியை

## தமிழ் (முதல் மொழி) வகுப்பு - 3
## கற்றல் திறன் இலக்குகள் மற்றும் கற்றல் விளைவுகள்

| SR No. | Lo Nos | கற்றல் விளைவுகள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | CG-1 | கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு உரையாடலை தொடர்ந்து நடத்த வாக்கிய அமைப்புகளைப் புரிந்து கொண்டு வாய்மொழித் திறன்களை வளர்த்தல் | |
| | C-1.1. | பல்வேறு சூழ்நிலைகளில் சரளமாகவும் பொருள் அறிந்தும் உரையாடுதல் | |
| 1. | 1.1.1. | பல்வேறு சூழ்நிலைகளில் சொந்த நடையில் சரளமாக 5 அல்லது 6 வாக்கியங்களைப் பேசுதல் | 4,11,14,22,38,41,63,69,76,78,86 |
| 2. | 1.1.2. | அனுபவித்த ஒரு நிகழ்வு, சூழ்நிலை பற்றிய அதிக செய்திகளை தெரிந்து கொள்ள மற்றவர்களோடு உரையாடுதல் | 2,18,24,25,30,33,43,46,56,58, 63,69,69,74,76,86 |
| 3. | 1.1.3 | நடந்த நிகழ்வுகள் அதன் சூழ்நிலைகள் பற்றி மேலும் தகவல் அறிய உரையாடுதல் | 2,15,18,24,30,33,36,40,46,48, 49,53,54,58,63,74,76,86 |
| 4. | 1.2.1. | உரைநடைப் பகுதிகளைப் படித்து முக்கிய கருத்துகளைக் கூறுதல் | 2,8,11,13,15,20,24,30,38,41,45,58,65,69,76,78,86 |
| 5. | 1.2.2. | வாசித்த உரை, உரைப்பகுதியின் முக்கிய கருத்தைப்பற்றி 5 முதல் 8 வாக்கியங்களில் கூறுதல் | 8,16,13,20,14,25,31,57,55,76 |
| 6. | 1.2.3. | வாசித்த இலக்கியத்தின் உரை சுருக்கத்தை கூறுதல் | 8,13,16,20,25,31,55,76 |
| 7. | 1.3.1. | காண்பிக்கப்பட்ட அல்லது பார்த்த பொருள் பற்றி 3 அல்லது 4 வாக்கியங்கள் பேசுதல் | 4,22,36,43,44,45,49,51,53,54,55,56,72, 74,76 |
| 8. | 1.3.2. | பல்வேறு நிகழ்வுகளில் தனது சொந்த நடையில் வாழ்த்துக்களைத் தெரிவித்தல் | 18,19,23,25,55,82 |
| 9. | 1.3.3. | வகுப்பறையில் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசுதல். | 2,8,14,15,22,34,37,38,41,56,64,68,76 |
| 10. | 1.3.4. | பல்வேறு நிகழ்வுகளில் பல்வேறு தலைப்புகளில் பேசுதல். | 8,25,38,41,55,58,64,78 |
| | CG-2 | தெரிந்த மற்றும் தெரியாத பல நூல்களை வாசித்தல், புரிந்து கொள்ளுதல். இந்நூல்கள் உரைநடை பகுதியாகவோ பாடல் பகுதியாகவோ இருந்தால் வாசித்தல் திறன் வளரும். | |
| | C-2.1 | பாடப் பகுதியை புரிந்து கொள்ள பல நுட்பங்களைக் கையாளுதல், அதாவது ஊகித்தல், முடிவுக்கு வருதல், மனதில் காட்சிப் படங்களை உருவாக்குதல் போன்றவை. | |
| 11. | 2.1.1. | அறிமுகமான மற்றும் அறிமுகமற்ற உரைநடை பகுதிகளில் எளிய சொற்கள் இணை எழுத்துக்கள் கொண்ட 3 அல்லது 4 வாக்கியங்களை தவறின்றி வாசித்தல். | 1,5,10,11,14,15,30,35,36,51,52,55,63,70, 75,78,83,84,87 |
| 12. | 2.1.2. | ஒரு உரையை படிக்கும் பொழுது படங்கள், சொற்கள், காட்சி படங்களை இணைத்துப் பொருளை புரிந்து கொள்ளுதல். | 4,5,6,10,11,14,15,17,18,27,28,32,35,36,46, 49,57, 59,61,70,83 |
| 13. | 2.1.3. | வாசித்த சிறிய பகுதிகளை ஓரிரு வாக்கியங்களில் சொந்த நடையில் எழுதுதல் | 24,30,34,45,55,58,69,76,86 |
| 14. | 2.1.4. | அறிமுகமற்ற உரைநடை பகுதிகளில் சொற்களை மொழியில் மாற்றுச் சொல் பொருள் கூறுதல். | 2,8,24,38,41,58,69,78,81 |
| 15. | 2.1.5. | உரையின் முக்கிய கருத்தை யூகித்து தனது சொந்த நடையில் கூறுதல். | 2,14,15,25,34,37,41,56,64,68,69,76,81 |
| 16. | 2.2.1. | பாடப்புத்தகங்கள் தவிர பிற உரைகளிலிருந்து அறிமகமற்ற சொற்களின் பட்டியல் தயாரித்தல். | 25,31,38,45,76 |
| 17. | 2.2.2. | குழுவாக வாசித்தல் மற்றும் செயல்களில் பங்கேற்றல். | 2,8,23,31,32,33,45,51,68 |
| 18. | 2.2.3. | கதை, கவிதைகள் மற்றும் பிற இலக்கியங்களின் கருத்துக்களை புரிந்து கொள்ளுதல் மற்றும் அதில் தனது விளக்கங்களையும் சேர்த்து அளித்தல். | 2,8,13,14,15,16,17,22,25,37,39,41,56,58, 63,64 |
| | CG-3 | புரிதலையும் அனுபவத்தையும் வெளிப்படுத்த எளிய மற்றும் கலவையான வாக்கியங்களை எழுதும் திறனை மேம்படுத்துதல். | |
| | C-3.1 | எழுதும் விதிகளை பயன்படுத்துதல். (எ.கா) வரிசையாக எழுதுதல், தலைப்பு, துனை தலைப்புகளைக் காணுதல். ஆரம்பம், முடிவு ஆகியவற்றை சரியாக எழுதுதல். | |
| 19. | 3.1.1. | எழுதும் விதிகளை அறிந்து வாக்கிய அமைப்பின் வரிசைப்படி வாக்கியங்களை உருவாக்குதல். | 9,13,14,16,24,30,34,41,45,50,55,58,69, 72,76,81 |
| 20. | 3.1.2. | மாணவர்கள் வாசித்த பகுதியில் நிகழ்வுகளின் வரிசையை சரளமாக எழுதுதல் | 30,35,46,63,64,86 |
| 21. | 3.1.3. | உரைநடை பகுதியில் உள்ள தலைப்பு, துணை தலைப்பு தெரிந்து கொள்ளுதல் | 17,18,19,46,58,76 |
| 22. | 3.1.4. | தனது அனுபவத்தை முறையாக வரிசைப்படி எழுதுதல். | 30,46,64 |
| | C-3.2 | கொடுக்கப்பட்ட பத்திகளின் தலைப்பு, கருத்து மற்றும் புரிதலை வெளிப்படுத்தும் பத்திகளை எழுதுதல் | |

| | | | |
|---|---|---|---|
| 23. | 3.2.1. | வாசித்த உரையின் கருத்தினை பற்றி 5 அல்லது 6 வாக்கியங்கள் எழுதுதல். | 30,42,50,55,58,69,78 |
| 24. | 3.2.2. | தரப்பட்ட உரையைப் பற்றி சொந்த நடையில் தெளிவாக 5 அல்லது 6 வாக்கியங்கள் எழுதுதல் | 13,42,50,55,58,72,76 |
| | C-3.3 | சுவரொட்டிகள், கையெழுத்துப் பிரதிநிதிகள், அழைப்பிதழ்கள், கவிதைகள், கதைகள் மற்றும் உரையாடல்கள் எழுதுதல் | |
| 25. | 3.3.1. | பலவிதமான நல்ல சிந்தனைகள், பொன்மொழிகள் போன்றவற்றை எழுதுதல் /படியெடுத்தல் | 41,81 |
| 26. | 3.3.2. | செய்யுள் பகுதியில் உள்ள ஒத்த ஒலி சொற்களை எழுதுதல். | 2,41,45 |
| 27. | 3.3.3. | 5 அல்லது 6 வாக்கியங்களில் தனது அனுபவத்தை சொந்த நடையில் எழுதுதல். | 13,30,34,50,76,78,88 |
| | C-3.4 | எழுதும் போது இலக்கண விதிகளின் படி தகுந்த சொற்கள் மற்றும் வாக்கிய அமைப்புகளைப் பயன்படுத்துதல். | |
| 28. | 3.4.1. | சொற்களுக்கு இடையே தகுந்த இடைவெளி விட்டு தகுந்த நிறுத்தல் குறிகளுடன் வாக்கியங்களை எழுதுதல் / படியெடுத்தல். | 9,14,24,41,51,69,72,79,88 |
| 29. | 3.4.2. | பொருத்தமான நிறுத்தற்குறிகளை பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுதல். | 3,13,21,31,50,55,64,88 |
| 30. | 3.4.3. | பெயர்ச்சொல், பதிலிப் பெயர்ச்சொல், பால், எண் இவற்றை கருத்தில் கொண்டு வாக்கியங்களை எழுதுதல் | 9,10,14,21,26,35,38,39,41,47,59,60,69, 73,86,88 |
| | CG-4 | பல்வேறு சூழல்களில், சந்தர்ப்பங்களில் (வீடு மற்றும் பள்ளி) அனுபவங்கள் மூலம் பல சொற்களை அறிதல். | |
| | | திறன்: ஒரு சொல்லின் பல்வேறு பொருள்கள் மற்றும் பல்வேறு சொற்களில் ஒரே பொருள் தரும் சொற்களை புரிந்து கொள்ளுதல். | |
| 31. | 4.1.1. | ஒரு சொல்லின் பொருளைத் தரக்கூடிய வேறு சொல் கூறுதல். | 2,8,24,51,58,69,78,79,81 |
| 32. | 4.1.2. | ஒரு சொல்லின் வேறு பொருள் தரும் சொல் கண்டு பிடித்தல். | 1,77,78,79 |
| 33. | 4.1.3. | சொல்லை விரிவு படுத்துதல். | 2,51,72 |
| 34. | 4.1.4. | கூட்டப் பெயர்கள் மற்றும் பல சொற்களுக்கு பதில் ஒரு சொல் இவற்றைக் கண்டு பிடித்துக் கூறுதல். | 11,70,71,72,77,78 |
| | C-4.2 | படங்களை, சொற்களை விவரிக்க, சொல்லாட்சி திறன் மேம்பட, விளையாட்டுகள் மூலம் உற்சாகப் படுத்துதல். | |
| 35. | 4.2.1. | பல்வேறு படங்களையும் சூழல்களையும் பயன்படுத்தி வருணனை செய்ய சொற்களைத் திட்டமிடல் பயன்படுத்தல். | 15,22,31,48,49,53,55,56,72,74,82 |
| 36. | 4.2.2. | மொழி பட விளையாட்டுகளில் புதிய சொற்களை பயன்படுத்துதல். | 14,20,21,45,51,72,76,79,82 |
| | C-4.3 | நாட்டுப்புற பாடல், இலக்கியம், தாலாட்டு, வாழ்த்து, தெம்மாங்கு, கும்மி, ஒப்பாரி, கிராமியகதை, திருக்குறள், நன்னெறி போன்றவற்றின் மூலம் சொல்லாட்சி திறனை வளர்த்தல். | |
| 37. | 4.3.1. | நாட்டுப்புறப் பாடல்களை வாசித்து அப்பாடல்களில் உள்ள அறிமுகம் இல்லாத சொற்களின் பொருள் கூறுதல். | 13,25,31,45,51 |
| 38. | 4.3.2. | நாட்டுப்புறப் பாடல்களான தாலாட்டு, தெம்மாங்கு, கும்மி, ஒப்பாரி போன்றவற்றை அறிமுகமற்ற சொற்களை தொகுத்தல். | 13,25,31,45,51 |
| | CG-5 | வாசிப்பதில் ஈடுபாடும் விருப்பமும் வளர்த்துக் கொள்ளுதல். | |
| | C-5.1 | திறன் : நூலகத்தில் இருந்து புத்தகங்களை எடுத்து வாசித்தல். | |
| 39. | 5.1.1. | பள்ளி நூலகம், உள்ளூர் நூலகம் இவற்றை பார்வையிட்டு நூலகத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல். | 32,33,34,41 |
| 40. | 5.1.2. | பள்ளி நூலகத்தில் இருந்து புத்தகங்கள் எடுத்து வாசித்தல். | 8,22, 34,41,56 |
| 41. | 5.1.3. | தங்களுக்குப் பிடித்த கதை, கவிதை, பாடல் புத்தகங்களை தேடி வாசித்தல். | 8,22, 34,41,56 |
| 42. | 5.2.1. | புத்தகத்தின் முன் அட்டை, பின் அட்டை, தலைப்பு இவற்றைப் பற்றிய கலந்துரையாடலில் பங்கேற்றல். | 34,53,56 |
| 43. | 5.3.1. | செய்தித்தாள்களில் உள்ள படங்களைப் பார்த்து செய்திகளை கூறுதல். | 39,55,58,82 |
| 44. | 5.3.2. | செய்தித்தாள்களில் உள்ள செய்திகளின் தலைப்பை வாசித்தல். | 39,58,78,82 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கற்றல் விளைவுகளை மாணவர்கள் கற்பித்தல் மூலம் பெற வேண்டியது அவசியமாகும். கற்றல் விளைவுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்டுள்ள பக்க எண்கள் மட்டுமின்றி, மற்ற பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களின் மூலம் பிற கற்றல் விளைவுகளை அடைய முடியும் என்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

**குறிப்பு:** சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றல் – கற்பித்தல் செயல்பாட்டின் போது சைகை மொழி மற்றும் பிற துணை கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

# பொருளடக்கம்

## அலகு - 1


| வரிசை எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | நாடு எங்கள் தாய் நாடு | 01 |
| 2. | நரியும் லட்டும் | 05 |
| 3. | கலைவாணி சொன்ன கதை | 11 |
| 4. | மழையில் நனைவோம் | 15 |
| 5. | சுதந்திர தினத் திருவிழா | 18 |
| ✸ | பட வாசிப்புப் பகுதி | 22 |


## அலகு - 2


| வரிசை எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6. | பிறந்த நாள் கொண்டாட்டம் | 23 |
| 7. | மேளம் வந்தது | 27 |
| 8. | நூலகம்-களப்பார்வை | 32 |
| 9. | உலகம் சுற்றலாம் | 36 |
| 10. | திருக்குறள் | 40 |
| ✸ | வாசிப்புப் பகுதி | 43 |


## அலகு - 3


| வரிசை எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 11. | இயற்கையோடு நட்பு | 44 |
| 12. | தொப்பி யாருக்கு? | 48 |
| 13. | பரிசு | 53 |
| 14. | அலைபேசி | 57 |
| 15. | புனே சிற்றுலா | 61 |
| ✸ | வாசிப்புப் பகுதி | 65 |


## அலகு - 4


| வரிசை எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 16. | தெனாலிராமன் | 66 |
| 17. | கூட்டப் பெயர்கள் | 70 |
| 18. | ஆழ்கடல் அதிசயங்கள் | 74 |
| 19. | படி ... படி ... படி ... | 77 |
| 20. | மூதுரை | 80 |
| ✸ | வாசிப்புப் பகுதி | 82 |
| 21. | ஓர் ஈயின் கதை | 83 |

# 1. நாடு எங்கள் தாய் நாடு

அலகு - 1

● பாடி மகிழ்வோம்!

நாடு எங்கள் தாய் நாடு
பாரதம் என்னும் பொன் நாடு

அறிவு சார்ந்த நல் நாடு
ஆற்றல் மிகுந்தது நம் நாடு

வளமை நிறைந்த நம் நாடு
வீரம் செறிந்தது நம் நாடு

மொழியால் பலவாய் பிரிந்தாலும்
உணர்வால் இணைந்தது நம் நாடு

ஓங்கி நிற்கும் கலைகளையே
தாங்கி நிற்பது நம் நாடு

நம் நாடு தன்னைப் போற்றிடுவோம்
அதன் நற்புகழையே ஏற்றிடுவோம் (நாடு)



## இவற்றைச் செய்வோம்.



### பொருள் அறிவோம்.

1. ஆற்றல் - வலிமை
2. ஏற்றம் - உயர்வு
3. வளமை - செழிப்பு
4. செறிந்த - மிகுந்த

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. நம் நாட்டின் பெயர் என்ன?
2. நீ வாழும் மாநிலத்தின் பெயர் என்ன?
3. நம் நாட்டில் வாழும் மக்களின் சிறப்பு பண்புகள் யாவை?
4. உன் வீட்டின் அருகில் உள்ள மக்கள் பேசும் மொழிகள் சிலவற்றைக் கூறுக.

### ஆ) சொல்லோடு சொல் சேர்த்து புதிய சொல் உருவாக்குக.




எடுத்துக்காட்டு:

1. நம் நாடு
2. ......................
3. ......................
4. ......................

### இ) ஒத்த ஒலி உள்ள சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

| ஓங்கி | ........................ | போற்றிடுவோம் | .................. |
|---|---|---|---|

**ஆசிரியர் குறிப்பு:** பாடலின் கருத்தைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடவும். குரல் ஏற்ற இறக்கங்களோடு பாடலைத் தனியாகவும் குழுவாகவும் பாட பயிற்சி அளிக்கவும்.

# நிறுத்தற்குறிகள்



என் பெயர் விஜயா.
உன் பெயர் என்ன?



என் பெயர் வியப்புக்குறி
நான் வாக்கியத்தில் உள்ள வியப்பு,
மகிழ்ச்சி, அச்சம், துக்கம்
போன்ற உணர்ச்சிகளை
வெளிப்படுத்தி நிற்பேன்.

**எடுத்துக்காட்டு.**

1. ஆஹா! தட்டு நிறைய லட்டு.
2. அச்சச்சோ! பென்சில் தொலைந்து விட்டதே!



என் பெயர் கவியரசு.
உன் பெயர் என்ன?



நான் தான் காற்புள்ளி
பல பொருட்கள், பெயர்கள்
தொடர்ந்து வரும் போது
இடைநிறுத்தக் குறியாக, வாக்கியத்
தில் உள்ள உட்பிரிவுகளைப்பிரிக்க
பயன்படுவேன்.

**எடுத்துக்காட்டு.**

1. அனிதா, மாலதி, கண்ணன், ஆதாம்
அனைவரும் நண்பர்கள் ஆவர்.
2. எனக்கு வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம், மாம்பழமும் பிடிக்கும்.

ஆசிரியர் குறிப்பு: காற்புள்ளி, வியப்புக்குறி ஆகியன கேலிசித்திர வடிவில் வரையப்பட்டுள்ளன. சிறப்பு தேவையுள்ள குழந்தைகளுக்கு புரியும் வகையில் ஆசிரியர் விளக்கம் தரவும்.




மாணவர்களுக்கான அறிவுரை: படத்தில் உள்ள சிறுமியின் அறிமுகத்தை யூகித்து எழுதுங்கள். நீங்களும் படங்களில் உங்கள் அறிமுகத்தை எழுதவும்.



# 2. நரியும் லட்டும்



## கதையை வாசிப்போம்! மகிழ்வோம்!

ஒரு காடு. அக்காட்டில் ஒரு நரி. அதற்கு ஆமை, நாரை, முயல், எலி ஆகியன நண்பர்கள். அவை மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.



ஒரு நாள் அந்தக் காட்டின் வழியாக ஒரு மனிதன் வந்தான்; மரத்தின் கீழ் ஓய்வெடுத்தான்; அவன் செல்லும்போது ஒரு பாத்திரத்தை மறந்து விட்டுச் சென்றான்.



அதனை மரத்தின் பின்னால் மறைந்து இருந்த நரி பார்த்தது.


ஆகா!
லட்டு
நானே எல்லா
லட்டுகளையும்
தின்பேன்.
அன்று ஒரு நாள் நான் ஆற்றைக் கடக்க
உதவியது என் நண்பன் ஆமை அல்லவா!
பசியாற
மீனைக்
கொடுத்ததே
நாரை!
உடல்நலம்
பேண கேரட்
தந்ததே முயல்!


வலையில் இருந்து விடுவித்ததே எலி!
இவர்கள் என் உயிர் நண்பர்கள் அல்லவா?
இவர்களை விட்டுவிட்டுத் தனியாக சாப்பிட நினைத்தேனே! தவறு அல்லவா?
???
என்னுடைய நண்பர்களோடு பகிர்ந்து உண்பேன்.




**நீதி:** "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

இந்தக் குறள் 'தன்னிடம் உள்ளதை பிறருக்கு பகிர்ந்து கொடுத்து அனைத்து உயிர்களையும் அன்புடன் காக்க வேண்டும்' என்ற உயரியக் கருத்தை வலியுறுத்துகிறது.



## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

1. பகுத்துண்டு – பங்கிட்டு
2. ஓம்புதல் – பாதுகாத்தல்
3. பல்லுயிர் – பல உயிர்
4. நூலோர் – கற்றோர்

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. நரியின் நண்பர்கள் யாவர்?
2. நரி முதலில் என்ன நினைத்தது?
3. நரிக்கு கிடைத்தது போல உனக்கு ஓர் இனிப்புப் பெட்டிக் கிடைத்தால் நீ என்ன செய்வாய்?

**ஆசிரியர் குறிப்பு:** நூலகத்திலிருந்து பல்வேறு சிறுவர் இலக்கிய கதைகளை வாசித்து வகுப்பறையில் கூறச் சொல்லவும். நாடகமாக நடிக்கச் சொல்லவும்.கதையின் தொடக்கம் மற்றும் முடிவைக் கூறச்சொல்லவும்.

## ஆ) வாசித்து விடை எழுதுக.

1. நரிக்கு என்ன கிடைத்தது?

   ..............................................................................................

2. லட்டுப் பாத்திரத்தை மறந்து சென்றது யார்?

   ..............................................................................................

## இ) உதவியது எப்படி? படத்துடன் வாக்கியங்களை இணைக்கவும்



| | |
|---|---|
|  | வலையில் இருந்து விடுவித்தது. |
|  | ஆற்றைக் கடக்க உதவியது. |
|  | கேரட்டை உண்ணக் கொடுத்தது. |
|  | பசியாற மீன்களைக் கொடுத்தது. |

## ஈ) சொற்றொடர்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.

1. நரியும் அதன் நண்பர்களும் காட்டில் வசித்து ...................... (வந்தனர் / வந்தன)
2. மனிதன் ஒருவன் லட்டுப் பாத்திரத்தை மறந்து விட்டுச் ............................ (சென்றான் / சென்றது)
3. முயல் நரிக்குக் கேரட்டைக் ......................... (கொடுத்தது / கொடுத்தான்)
4. நரி லட்டுப் பாத்திரத்தைப் ...................... (பார்த்தாள் / பார்த்தது)




**உ) பின்வரும் சொற்களை ஒருமை, பன்மை என வகைப்படுத்திக் கூடையை நிரப்புக.**

லட்டுகள், ஆறு, மரம், காடு, முயல்கள், நண்பர்கள், பூக்கள், நாரை




★ ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை.

★ ஒன்றிற்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

| ஒருமை | விகுதிகள் | பன்மை |
|---|---|---|
| இலை | – கள் | இலைகள் |
| பூ | – க்கள் | பூக்கள் |
| மரம் | (ம்) – ங்கள் | மரங்கள் |
| பல் | (ல்) – ற்கள் | பற்கள் |
| ஆள் | (ள்) – ட்கள் | ஆட்கள் |

**ஊ) சரியானவற்றோடு இணைக்கவும்.**

| முள் | பா | கல் | தடம் | மலை |
|---|---|---|---|---|
| தடங்கள் | மலைகள் | முட்கள் | பாக்கள் | கற்கள் |

# 3. கலைவாணி சொன்ன கதை

முறை மாறியுள்ள சொற்களை சரிபடுத்தி கதையை வாசிப்போம்!

(கலைவாணி என்றொரு சிறுமி இருந்தாள். அவளுக்கு கதை கூற மிகவும் பிடிக்கும். அவள் நூலகத்திலும், செய்தித் தாள்களிலும் படித்த கதைகளை நண்பர்களுக்கும், பெற்றோருக்கும் அடிக்கடி கூறுவாள். அதோடு அவள் பார்த்த நிகழ்ச்சிகளோடு தன் சொந்தக் கற்பனையைச் சேர்த்து பிறருக்கு ஆர்வம் ஏற்படும்படி கதையாகக் கூறுவாள். ஒரு நாள் அவள் நண்பர்களுக்கு கூறிய கதையை நீங்களும் கேளுங்கள்......)



ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் சதீஷ். அவனுக்கு நாய்க்குட்டி வளர்க்க ஆசை. அவன் தன் அம்மாவிடம் அதைக் குறித்துப் பேசினான். அதற்கு அவனது அம்மா, “நீ சிறுவன். நாய்க்குட்டி வளர்த்தால் அதனை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். உன்னால் அதனைச் சரியாகப் பராமரிப்பது **மம்ரசி**” என்று கூறி விட்டார்கள். ஒரு நாள் சதீஷ் அவன் **ட்ண்டிவீ** அருகே நாய்க்குட்டி ஒன்றைக்கண்டான். அது உணவைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது. அதற்கு அவன் தன்னிடம் உள்ள உணவைக் கொடுத்தான். அதனால் அது தினமும் அவனைச் சுற்றிச்சுற்றி **வதுந்த.** அவனும் அவ்வப்போது

அதற்கு உணவு கொடுத்து வந்தான். நாய்க்குட்டி அவனுடன் மிகவும் பாசமாக பழகியது.



ஒரு நாள் நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. தந்அ நாய்க்குட்டி மழையில் நனைந்தபடியே சதீஷ் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தது. சதீஷ் அதைக் கண்டதும் தன் அம்மாவிடம் ஓடி வந்து விதஉ கேட்டான். அம்மா அந்த நாய்க் குட்டியைப் பார்த்தவுடன் அதற்கு கும்ளிரு என்று எண்ணி அந்த நாய்க்குட்டியைத் துணியால் துடைத்து அதை வீட்டின் உள்ளே அனுமதித்தார்கள். பின் சதீஷிடம் அதற்கு வுணஉ கொடுக்கக் கூறினார்கள். சதீஷின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்றிலிருந்து அந்த நாய்க்குட்டி அவன் வீட்டிலேயே வளர்ந்தது. அது வீட்டில் எல்லோரிடமும் பாசமாகப் பழகியது. அதற்கு தனியாக முடம்இ உணவும் தந்து, அந்த நாய்க்குட்டியை அனைவரும் நன்றாகக் கவனித்து வளர்த்தனர். அந்த நாய்க்குட்டி வளர்ந்தபின், அந்த வீட்டிற்குக் காவலாக இருந்தது. வீட்டில் உள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

முறைமாறியுள்ள சொற்கள்:

1. சிரமம் 2. வீட்டின் 3. வந்தது 4. அந்த
5. உதவி 6. குளிரும் 7. இடமும்

## இவற்றைச் செய்வோம்.



**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. கலைவாணி கூறிய கதை யாரைப் பற்றியது?
2. சதீஷ் எதை வளர்க்க ஆசைப்பட்டான்?
3. நீ எந்த விலங்கை வீட்டில் வளர்க்க விரும்புவாய்?

**ஆ) சிந்தித்து எழுதுக.**

1. பூனைக்குட்டி ஒன்றை நீ வளர்த்தால், அதை நீ எவ்வாறு கவனித்துக் கொள்வாய்? 5 அல்லது 6 வரிகளில் எழுதவும்.

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

**இ) இந்த கதை உனக்கு பிடித்திருக்கிறதா? ஏன் எனக் கூறுக.**

**ஈ) விலங்குகள் மற்றும் அவற்றின் குட்டிகளின் பெயர்களை அறிந்து எழுதுவோம்.**



★ ____________



★ ____________



★ ____________



★ ____________



★ ____________



★ ____________

உ) பிழைகளைத் திருத்தி பத்தியை மீண்டும் எழுதுக.

அவள் பெயர் சதீஷ். அவளுக்கு நாய்குஞ்சு வளர்க்க ஆசையாக இருந்தது. நாய்குஞ்சு ஒன்றை கொண்டு வந்தான். அம்மாவுக்குத் தெரியாமல் அவளுக்கு சோறு போட்டான். அவளுடன் எப்போதும் விளையாடுவாள்.



.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

ஊ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து சொற்றொடர்களை எழுதுக.

1. முயல்கள் வேகமாக .................... (ஓடியது / ஓடின)
2. அவர்கள் தெருவில் .................... விளையாடினார்கள் / விளையாடினான்)
3. கலைவாணி ஒரு ............. சொன்னாள். (கதை / கதைகள்)
4. அம்மா ...................... திரும்பினார் (வீடுகளுக்கு / வீட்டிற்கு)

எ) நீ படித்த கதை ஒன்றை 5 முதல் 8 வாக்கியங்களில் உன் வகுப்பு மாணவர்களுக்குக் கூறுக. கதாபாத்திரங்களைப்பற்றி கலந்துரையாடுக.

ஏ) சொல் சங்கிலியை நிறைவு செய்க.

கதை
└ கடல்
  └ [ ]
    └ [ ]

ஆசிரியர் குறிப்பு: வகுப்பறையில் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் புதிய கதை / கவிதையை உருவாக்கி கூறச் சொல்லவும்.

# 4. மழையில் நனைவோம்

## பாடி மகிழ்வோம்!

தாத்தா! பாட்டி! வாங்க நீங்க!
மழையில் நனையலாம் மகிழ்வாக!
மண்ணணை கட்டலாம் அழகாக!
கப்பல் விடலாம் சிறப்பாக!





சின்னப் பயலே! செல்லப் பயலே!
மழையில் நனைய வேண்டாமே!
சொன்னால் நீயும் கேட்பாயே!



அப்பா! அம்மா! வாங்க நீங்க!
மழையில் நனையலாம் மகிழ்வாக!
மண்ணணை கட்டலாம் அழகாக!
கப்பல் விடலாம் சிறப்பாக!



அன்பு மகனே! செல்ல மகனே!
வேலை இருக்கு வீட்டினிலே!
கப்பல் விடு தங்கையோடு!

**ஆசிரியர் குறிப்பு:** பாடலை நிகழ்வாக மாற்றி 5 அல்லது 6 வாக்கியங்களில் கூற சொல்லவும்.



சரிதான் அம்மா அப்படியே!
காகிதக் கப்பல் செய்து கொடு!
இருவரும் சேர்ந்தே விடுவோமே!
மழையைக் கண்டு மகிழ்வோமே!

## இவற்றைச் செய்வோம்.

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. நீ மழையில் காகிதக் கப்பல் விட்டு விளையாடி இருக்கிறாயா? யாருடன் விளையாடி இருக்கிறாய்?
2. பாடலிலுள்ள முக்கிய சொற்களையும் வாக்கியங்களையும் அடிக்கோடிடவும்.
3. ஆனந்த் யார் யாரை மழையில் விளையாட அழைத்தான்?

### ஆ) சிந்தித்து எழுதுக.

1. மழைக்காலத்தில் நீ என்னென்ன பொருட்களை பயன்படுத்துவாய்?

..............................................................................................

2. மழையில் நனைந்து விளையாடுவது பற்றி உனது கருத்தை எழுதுக.

..............................................................................................

இ) மழை பற்றிய பாடலை நிறைவு செய்க.

மின்னல் வெட்டுது பளிச்! பளிச்

இடி ....................................

மழை ................................

கூரையில் ............................

ஈ) வாசிப்பேன், தலைப்பு, துணைத் தலைப்பு தருவேன்.



விளையாட்டு என்றால் சிறுவர் மனம் மகிழ்வர். 'மாலை முழுதும் விளையாட்டு' என பாரதியார் கூறியுள்ளார். விளையாடுவதால் குழந்தைகள் உடல் நலம் பெருகும். மனவலிமையும் பெறுவர். ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல், தலைமை பண்பு போன்ற பண்புகள் வளரும். விளையாட்டில் பல வகைகள் உண்டு. அவை உள்ளரங்க விளையாட்டுகள், வெளியரங்க விளையாட்டுகள், பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் நவீன மின்னணு விளையாட்டுகள் என்பன ஆகும்.







1. தலைப்பு:

.........................................................................

2. துணைத்தலைப்பு:

.........................................................................

.........................................................................

# 5. சுதந்திர தினத் திருவிழா

## வாசிப்போம்! மகிழ்வோம்!

பள்ளியிலிருந்து வந்தவுடன் வெண்பாவும் இனியனும் சிறிது ஓய்விற்குப்பிறகு சிற்றுண்டி சாப்பிட்டார்கள். இனியன் பம்பரம் சுற்றி விளையாடினான். வெண்பா ஊஞ்சலாடி மகிழ்ந்தாள். சிறிது நேர ஓய்விற்கு பிறகு கை கால்களை கழுவி விட்டு உடைமாற்றினர். பாட்டியிடம் சிறிது நேரம் பள்ளியில் நடந்தவற்றைப் பற்றி பேசினார்கள்.



வெண்பா, "பாட்டி, நாளை பள்ளியில் சுதந்திர தின விழா. நான் அட்டையால் ஒரு முரசு செய்யவேண்டும்." என்று கூறினாள். அப்போது இனியன், "பாட்டி, நாளை பள்ளியில் சுதந்திர தின விழாவில் பேச்சுப் போட்டியில் நான் பங்கெடுத்து பேசப் போகிறேன். அதனால் என்னை காலையில் சீக்கிரம் எழுப்பி விடுங்கள்" என்றான்.

வெண்பா, “நானும் நடன நிகழ்ச்சியில் கலந்திருக்கிறேன். எங்கள் வகுப்பு மாணவர்கள் ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே’ என்ற பாடலுக்கு குழு நடனம் ஆடுகிறோம்.” என்றாள். “பாட்டி! எங்களுக்கு சுதந்திர தினம் பற்றி கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்” என்றனர் இருவரும்.

பாட்டி இருவரையும் அழைத்து அருகில் அமர வைத்தார். “தங்கங்களே! சுதந்திர தினம் என்பது நமது தேசிய விழா. நமக்கு அது ஒரு திருவிழா. முன்பு நம் நாட்டை மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அப்போது வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தனர். நம் மக்கள் நிறைய துன்பங்களை அடைந்தனர். ஆங்கிலேயரிடமிருந்து நம்மை மீட்க நிறைய தலைவர்கள் போராடினர். தங்கள் இன்னுயிர் ஈந்து நமக்கு விடுதலை பெற்றுத் தந்தனர். அந்த நாள்தான் ஆகஸ்ட் 15, 1947, நமது சுதந்திரதினம் ஆகும்.

அன்றிலிருந்து விடுதலைப் பெற்ற நாம் நம்மை நாமே ஆளத் தொடங்கினோம். அந்த நாள் நமக்கு மிக முக்கியம். அந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் அல்லவா? நீங்கள் பள்ளிக்குச் சென்று தேசியக் கொடியேற்றிச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். விடுதலை பெற்றுத் தந்த அனைவருக்கும் நன்றி செலுத்த வேண்டும்” என்று கூறினார்.

“சரி பாட்டி. நானும் அக்காவும் நாளை பள்ளிக்கு செல்வோம். நமது சுதந்திர தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவோம்” என்றுக் கூறி இனியன் பாட்டியைக் கட்டிக் கொண்டான்.

## இவற்றைச் செய்வோம்.



அ) பேசுவோம் வாருங்கள்.

1. வெண்பா என்ன செய்ய வேண்டும் என்று கூறினாள்?
2. நம் நாட்டின் தேசிய விழாக்கள் யாவை?
3. நம் நாடு எப்பொழுது விடுதலை பெற்றது?
4. நீ இதற்கு முன் சுதந்திர தின விழா கொண்டாடி இருக்கிறாயா? எங்கு கொண்டாடினாய்?

ஆ) 'நண்பர்களுடன்' – இந்த சொல்லில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

எடுத்துக்காட்டு: கண்

..................... ..................... ..................... .....................

..................... ..................... ..................... .....................

இ) பாடத்திலிருந்து சொற்களை கண்டுபிடித்து வாக்கியத்தை நிறைவு செய்க.

1. இனியன் ............ சுற்றி விளையாடினான்.
2. வெண்பா .............. ஆடி மகிழ்ந்தாள்.
3. பாட்டி இருவரையும் .............. அருகில் அமர வைத்தார்.
4. சுதந்திர தினம் என்பது நமது ............. ஆகும்.
5. விடுதலை பெற்றுத்தந்த அனைவருக்கும் .......... சொல்ல வேண்டும்.

ஈ) சரியான எழுத்துகளால் கட்டங்களை நிரப்புக. கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்துக.

★ வீரர்களாலே
★ தங்கங்களே
★ முக்கியம்
★ மாணவர்கள்
★ அருகில்
★ ஆகஸ்ட்



உ) சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பாட்டி கதை (சொன்னாள் / சொன்னார்) ..................
2. அம்மா உணவு (தந்தாள் / தந்தார்) .....................
3. வெண்பா நடனம் (ஆடினார் / ஆடினாள்) ....................
4. அப்பா காய்கறிகளைச் சுத்தம் (செய்தார் / செய்தான்)
   ........................
5. இனியன் நண்பர்களுடன் (விளையாடினான் / விளையாடினாள்) .....................

ஊ) வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. தாய் தந்தை ........................................................................
2. காலை மாலை ....................................................................

எ) நீ உன் நண்பருடன் சேர்ந்து முரசு ஒன்று செய்க. அதற்கு தகுந்த வண்ணமிட்டு அழகு செய்க.

ஏ) சரியான நிறுத்தற் குறிகளை இடுக.

1. உனக்குப் பிடித்த நிறம் எது
2. ஆண் மயிலுக்குத் தோகை உண்டு
3. நேற்று மழை பெய்ததா

★ குறிப்புகளைப் பயன்படுத்துவேன். சொல்லைக் கண்டுபிடிப்பேன்.

| குறிப்பு | சொல் | புதிய சொல் |
|---|---|---|
| 1. மிளகாயின் சுவை | கடிகாரம் | ......................... |
| 2. முளைத்து வரும் | கவிதை | ......................... |
| 3. வேகமாக ஓடும் | மரக் குதிரை | ......................... |
| 4. கரம் | பலகை | ......................... |

## படவாசிப்புப் பகுதி

## குழந்தைகளும் குருவிகளும்

அம்மா குழந்தைகளுக்கு பொரி கொடுத்தார்கள். சட்டையிலிருந்த குருவிகள் பொரியைக் கண்டு பறந்து வந்தன. (மீதி கதையைக் கூறவும்.)



**ஆசிரியர் குறிப்பு:** இது போன்று வேறு படக்கதைகளைக் காட்டி மாணவர்கள் கதைக் கூற வாய்ப்புத் தரவும். பிற நூல்களிலிருந்து இது போன்ற கதைகளை கத்தரித்துக் கொண்டு வந்து வகுப்பறையில் பிற மாணவர்களுக்கு கதை கூற சொல்லவும்.

# 6. பிறந்த நாள் கொண்டாட்டம்



## பாடி மகிழ்வோம்!

நாளாம் நாளாம் திருநாளாம்!
காக்கை மாமாவின் பிறந்தநாளாம்!
கழுகு மலையிலே கொண்டாட்டம்!
கானகத்திலே ஆட்டம் பாட்டம்!

மைனா தங்கை வரவேற்க!
குயில் தம்பி பாட்டுப்பாட!
கிளி அக்கா வாழ்த்துக்கூற!
மயில் அண்ணா தோகை விரித்தாட!

பருப்போடு பாயசமும் சேர!
அப்பளமும் பழமும் கலந்து!
பந்தியிலே உணவோடு பரிமாறி!
பருந்தம்மா பரிவோடு உபசரிக்க!

வந்திருந்த சொந்த மெல்லாம்!
கூடிக்கூடி அமர்ந்து நன்றாய்!
வயிறார உண்டு மகிழ்ந்தனவே!
வாழ்த்துக்கூறி வானில் பறந்தனவே!





## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

1. கானகம் - காடு
2. வயிறாற - வயிறு நிறைய

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. யாருடைய பிறந்தநாள் கொண்டாடப்பட்டது?
2. விருந்திலே பாடியது யார்?
3. விருந்திற்கு வந்திருந்த உறவினர்கள் யாவர்?
4. காக்கைக்கு உணவு அளித்தால் அது என்ன செய்யும்?

### ஆ) கேள்விகளை வாசித்து விடைகளை எழுதுக.

1. விருந்தில் தோகை விரித்தாடியது யார்?
2. பறவைகள் எவ்வாறு மகிழ்ந்தன?
3. நீ உன்னுடைய பிறந்தநாளை எப்படிக் கொண்டாடினாய்?

### இ) பத்தியை வாசித்து கேள்விகளுக்கு விடை அளிக்கவும்.

நான் என்னுடைய வகுப்பு நண்பன் இரமேஷின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு தோழர்களுடன் சென்றிருந்தேன். இரமேஷின் பெற்றோர் பலூன்கள் மற்றும் வண்ண விளக்குகளால் வீட்டை அலங்கரித்து இருந்தனர். நாங்கள் பிறந்த நாள் பரிசாக அவனுக்கு படக்கதை புத்தகம் அளித்தோம். கேக் வெட்டியபிறகு அனைவரும் பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் பாடினோம்.

1. இரமேஷின் பெற்றோர் வீட்டை எவ்வாறு அலங்கரித்து இருந்தனர்?
2. உனக்குக் கிடைத்த பிறந்தநாள் பரிசுகள் பற்றி எழுதுக.

ஈ) கிளியக்கா என்ன வாழ்த்து கூறியிருக்கும்? கற்பனை செய்து உனது சொந்த வார்த்தைகளில் 4 அல்லது 5 வாக்கியங்களில் கூறுக.



★ **செயல் திட்டம்.**

கீழே உள்ள வாழ்த்து அட்டையை வாசித்து உன் நண்பர்களுக்கு வாழ்த்து அட்டை தயார் செய்.




ஆசிரியர் குறிப்பு: நாட்டுப்புற பாடல்களைக்கேட்டு அதிலுள்ள அறிமுகமற்ற சொற்களை பட்டியலிடக் கூறவும். பின்னர் ஆசிரியர் – பெற்றோர் உதவியோடு அவற்றின் பொருளை இணையத்தில் தேடி எழுதக் கூறவும்.




**மரம், பள்ளிக்கூடம், சித்திரை, கிளை, இனிப்பு, பாடுதல்**

மேலேயுள்ளச் சொற்களைக் கவனியுங்கள். இவை அனைத்தும் பெயரைக் குறிக்கின்றன. ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை:

1. உயிர் உள்ள மற்றும் இல்லாத பொருட்களின் பெயர் பொருள் பெயர் ஆகும்:-
   மேசை, ஆடு, புறா, தக்காளி, புனிதா
2. ஓர் இடத்தின் பெயர் இடப்பெயர் ஆகும்:-
   மும்பை, தில்லி, சென்னை, புனே
3. காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் ஆகும்:-
   திங்கள்கிழமை, ஜனவரி, தை
4. உறுப்பின் பெயர் சினைப்பெயர் எனப்படும்:-
   கால், இலை, வால், இறகு
5. பொருளின் குணம் அல்லது பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் ஆகும்:-
   கருப்பு, வட்டம், உயரம், இனிப்பு
6. செயலைக் / தொழிலைக் குறிக்கும் பெயர் தொழில் பெயர் ஆகும்:-
   கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்

★ பெயர்ச்சொல்லை அடிக்கோடிடுக.

1. மயில் நமது தேசிய பறவை ஆகும்.
2. நான் மாநகராட்சி பள்ளியில் படிக்கிறேன்.
3. வைகாசி தமிழ் ஆண்டின் இரண்டாம் மாதம் ஆகும்.
4. கண் உடலின் முக்கிய உறுப்பு ஆகும்.
5. கரும்பு இனிப்பு சுவை கொண்டது.
6. நடத்தல் சிறந்த உடற்பயிற்சி ஆகும்.

# 7. மேளம் வந்தது டும் .. டும் .. டும்..

## வாசிப்போம்! மகிழ்வோம்!





வள்ளியூர் என்றொரு கிராமத்திற்கு அப்பால் சிறிய காடு ஒன்று இருந்தது. அக்காட்டில் ஒரு குரங்கு இருந்தது. ஒரு நாள் அதன் காலில் முள் ஒன்று குத்தி விட்டது. குரங்கு வலியால் துடித்தது. அவ்வழியே சென்று கொண்டிருந்த பழ வியாபாரியிடம் குரங்கு உதவி கேட்டது. அவர் தன்னிடமிருந்த கத்தியால் முள்ளை எடுத்தார். அதனை புதரில் தூக்கி எறிந்தார்.

குரங்கு வியாபாரியிடம்,
"முள்ளை எனக்குத் தா!
இல்லையேல் உன் கத்தியைத் தா!"
என அடம் பிடித்தது. வேறு வழியின்றி அவர் கத்தியைக் கொடுத்து விட்டார்.
குரங்கு கத்தியைத் தூக்கிச் சென்றது.





வழியில் கையால் சுள்ளி ஒடித்துக் கொண்டிருந்த பாட்டியைப் பார்த்தது. “என்னுடைய கத்தியால் விறகை வெட்டிக் கொள்ளுங்கள், எளிதாக இருக்கும்” எனக் கத்தியைக் கொடுத்தது. பாட்டி சுள்ளி வெட்டும் பொழுது கத்தி உடைந்து விட்டது. குரங்கு, “என் கத்தியை எனக்குத் தா! அல்லது சுள்ளியைத் தா” என ரகளை செய்தது. குரங்கு சுள்ளியைத் தூக்கிச் சென்றது.





போகும்வழியில் முறுக்கு சுடும் அம்மா சுள்ளி தேடுவதைக் கண்டது. “சுள்ளி வேண்டுமா? இதை வைத்துக் கொள்ளுங்கள்” என குரங்கு சுள்ளியைக் கொடுத்தது.







"சரியான நேரத்தில் கொடுத்தாய்" என சுள்ளியை வாங்கி அடுப்பில் வைத்தார் அம்மா. அது எரிந்து சாம்பல் ஆயிற்று. இதைக் கண்ட குரங்கு "சுள்ளியைத் தா! அல்லது முறுக்கைத் தா!" என முரண்டு பிடித்தது. அந்த அம்மா தந்த முறுக்கை எடுத்துக்கொண்டு குரங்கு முன்னால் சென்றது.



சிறிது தூரத்தில் அழுது கொண்டிருந்த சிறுவனைப் பார்த்தது. அவன் கையில் ஒரு மேளம் இருந்தது. குரங்கு சிறுவனுக்கு முறுக்கைக் கொடுத்தது. சிறுவன் சாப்பிட்ட பிறகு "என் முறுக்கைத் தா! அல்லது மேளத்தைத் தா!" என குரங்கு கூச்சலிட்டது. அதனால் பயந்த சிறுவன் மேளத்தைக் கொடுத்து விட்டான்.

மேளத்தை எடுத்துக்கொண்டு குரங்கு ....

முள்ளு போய் கத்தி வந்தது டும் ... டும் ... டும் ...
கத்தி போய் சுள்ளி வந்தது டும் ... டும் ... டும் ...
சுள்ளி போய் முறுக்கு வந்தது டும் ... டும் ... டும் ...
முறுக்கு போய் மேளம் வந்தது டும் ... டும் ... டும் ...
டும் ... டும் ... டும்... டும் ... டும் ... டும்....

என ஆரவாரம் செய்து பாடிக்கொண்டே திரிந்தது.

## இவற்றைச் செய்வோம்.



### அ) பேசுவோம் வாருங்கள்.

1. நீ குரங்கைப் பார்த்திருக்கிறாயா? எங்கே, எப்போது பார்த்தாய்?
2. குரங்கு முதலில் யாரிடம் எதற்கு உதவி கேட்டது?
3. மேளம் யார் கையில் இருந்தது?
4. இந்த கதையும் பாடலும் உனக்குப் பிடித்திருக்கிறதா? ஏன் எனக் காரணம் கூறுக.

### ஆ) சிந்தித்து எழுதுக.

1. இந்தப் பாடத்தில் அம்மா செய்து கொண்டு இருந்த பண்டம் எது? அது உனக்கு பிடிக்குமா?

..............................................................................................

..............................................................................................

2. உன் காலில் முள் குத்தினால் நீ என்ன செய்வாய்?

..............................................................................................

..............................................................................................

### இ) சொற்றொடர்களை வாசித்து நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

1. பழ வியாபாரியிடம் உதவி கேட்டது.
2. முள்ளைத் தா! இல்லையேல் கத்தியைத் தா! என்றது.
3. அவர் கத்தியால் முள்ளை எடுத்தார்.
4. குரங்கின் காலில் முள் குத்தியது.
5. முள்ளைப் புதரில் தூக்கி எறிந்தார்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஈ) தகுந்த நிறுத்தற்குறிகள் இட்டு எழுதுக.

1. சுள்ளியைத் தா அல்லது முறுக்கைத் தா
2. காட்டில் ஒரு குரங்கு இருந்தது
3. மேளத்தை எடுத்துக் கொண்டு திரிந்தது
4. உன் பெயர் என்ன

உ) உனக்குப் பிடித்த விலங்கு பற்றி ஐந்து அல்லது ஆறு சொற்றொடர்கள் கூறுக.

ஊ) பத்தியை வாசிக்க. அதன் உட்கருத்தை உன் சொந்த சொற்களில் கூறுக.

வாணி ஒருநாள் தன் தாயுடன் சந்தைக்குச் சென்றாள். காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை வாங்கினாள். வரும் வழியில் தள்ளுவண்டி ஒன்றைப் பார்த்தாள். அதில் பல தொட்டிச் செடிகள் இருந்தன. அம்மாவிடம் அதில் ஒன்றை வாங்கச் சொன்னாள். வீட்டிற்குச் சென்று ஒரு தொட்டியில் செடியை நட்டு வைத்தாள். அதற்கு நீர் ஊற்றி பேணி வளர்த்தாள்.

வாணியின் தோழி மதிவதனி. அவள் வீட்டில் அழகான தோட்டம் ஒன்று உள்ளது. அத்தோட்டத்திலே மல்லிகை, செம்பருத்தி,செவ்வந்தி போன்ற பூச் செடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்குவது உண்டு. மா, கொய்யா, தென்னை போன்ற பலவகை மரங்களும் உள்ளன. மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து அவர்கள் உண்டு மகிழ்வர். அண்டை அயலார் வீட்டில் இருப்பவர்களுக்கும் கொடுப்பர். தோட்டத்தில் நீர் பாய்ச்ச, தூய்மை செய்ய பெற்றோருக்கு மதிவதனி உதவுவாள். அவள் வீட்டுத் தோட்டத்தைப் போல தோட்டம் அமைக்க வாணிக்கும் ஆசை.

ஆசிரியர் குறிப்பு: நாட்டுப்புற பாடல்களைக் காணொளியில் கேட்க மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி தரவும். அப்பாடல்களில் உள்ள மரபுச் சொற்களையும் பொருள்களையும் அட்டவணைப்படுத்தக் கூறவும்.

# 8. நூலகம் – களப்பார்வை

மூன்றாம் வகுப்பு மாணவர்கள் ஆசிரியருடன் முதன் முறையாக நூலகத்திற்கு செல்கிறார்கள். நூலகர் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று வழி நடத்துகிறார்.




இங்கே அமர்ந்து படிக்கலாமா?
ஆம். இங்கே அமர்ந்து படிக்கலாம்.
ஆனால் அமைதியாக படிக்க வேண்டும்.
புத்தகத்தை கிழிக்கக் கூடாது.
புத்தகத்தில் எதுவும் எழுதக்கூடாது.
ஒரு கேள்வி கேட்கலாமா?
அவசியம் கேட்கலாம்.
புத்தகத்தைப் படிக்க வீட்டிற்கு எடுத்துச் செல்லலாமா?
ஆம் பதிவேட்டில் பதிந்து விட்டு எடுத்துச் செல்லலாம். 15 நாட்களுக்குள் திருப்பித் தர வேண்டும். மேலும் அடிக்கடி நூலகத்திற்கு நேரடியாக வந்து பயன் பெறுங்கள்.



## இவற்றைச் செய்வோம்.

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. மாணவர்கள் நூலகத்தைக் காண யாருடன் சென்றனர்?
2. நூலகத்தில் எத்தனை வகை புத்தகங்கள் இருப்பதாக நூலகர் கூறினார்?
3. உனக்கு புத்தகங்கள் படிக்க பிடிக்குமா? எந்த வகையான புத்தகங்கள் பிடிக்கும்?
4. புத்தகத்தை எடுத்துச் செல்ல நூலகர் கூறிய விதிமுறைகள் யாவை?

### ஆ) சிந்தித்து எழுதுக.



1. உனக்கு பெற்றோர் படிப்பதற்கு வாங்கி கொடுத்த புத்தகங்களின் பெயர்களை எழுதுக.

..............................................................................................

2. புத்தகங்களை நீ எப்படி பாதுகாப்பாய்?

..............................................................................................

### இ) உன்னை எழுத்தாளனாக கற்பனை செய்து கீழ்க்காணும் கதையை நிறைவு செய்து கூறுக.

முன்னொரு காலத்தில் விஜயபுரி என்று ஓர் அரசு இருந்தது. அதன் அரசன் விஜய மகேந்திரன் ஆவான். அவனுடைய மகள் பிறந்ததிலிருந்து சிரித்ததே இல்லை. அவளை சிரிக்க வைப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசுத் தருவதாக அரசன் முரசு அறிவித்து கூறச்செய்தான். பலரும் முயன்றனர். ஒரு நாள் ஒரு சிறுவன் ........

**ஆசிரியர் குறிப்பு:** பள்ளி நூலகத்திற்குச் சென்று நூலகத்தின் விதிமுறைகளைப் பற்றி அறிய மாணவர்களுக்கு வாய்ப்பு தரவும். நூலகத்தில் உள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கக் கூறவும்.

ஈ) பெயர்ச் சொல்லை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| யானை | தேடினான் | சாக்லேட் | ஓடினான் |
| மரம் | பலகை | சட்டை | குதிரை |
| வந்தான் | சென்று | எடுத்தான் | மிதிவண்டி |
| பழம் | நம்பினான் | நிலக்கடலை | அலைபேசி |

★ அழைப்பிதழை வாசித்து விடை அளிக்கவும்.




1. எந்தப்பள்ளியின் ஆண்டு விழா நடைபெற உள்ளது?

..............................................................................................

2. ஆண்டு விழா நடைபெறும் நாள் எது?

..............................................................................................

3. பள்ளியில் நடந்த ஏதேனும் ஒரு நிகழ்ச்சி பற்றிய தகவல்களை வரிசைக் கிரமமாகக் கூறுக.

# 9. உலகம் சுற்றலாம்

## படிப்போம்! மகிழ்வோம்!

கார்த்திக் 8 வயது சிறுவன். அவன் ஒரு சிறப்புத் திறனாளி. அவன் அறிவுள்ள மிகவும் துடிப்பான சிறுவன். பள்ளியில் சரிவு பாதை இருந்ததால் பள்ளிச் செல்ல அவனுக்கு எந்தத் தடையும் இல்லை. பள்ளிக்குச் சென்று உற்சாகமாகப் பாடங்களைக் கற்றான். அவனுடைய நண்பர்களும் அவனுக்குத் துணையாக இருந்தனர். அவன் வீட்டுச் சன்னலில் இருந்து தெரியும் மலைகள், மரங்கள், பறவைகளைப் படமாக வரைவான்.

ஒருநாள் மைனா ஒன்று, அவன் வீட்டுச் சன்னலில் வந்து அமர்ந்தது. "நீ வரைந்துள்ள ஓவியங்கள் அழகாக உள்ளதே" என அவனைப் பாராட்டியது. மைனா பேசியதைக் கேட்ட கார்த்திக் வியப்புற்றான். இருவரும் நண்பர்களாயினர்.

ஒரு நாள் கார்த்திக் மைனாவிடம், "நீ அந்த மலைக்குச் சென்று வந்து அதைப்பற்றி வருணனை செய்கிறாயா? நான் அதை ஓவியமாக வரைவேன்" என்றான். மைனா உடனே மலைக்குச் சென்று வந்து அந்த காட்சிகளை விவரமாக வருணனை செய்தது. இவ்வாறே ஒவ்வொரு இடமாக பார்த்து விட்டு வந்து அவ்விடங்களைப் பற்றி கூறியது.



சில நாட்கள் கழித்து கார்த்திக் மைனாவிடம், "எனக்கு அமெரிக்கா போன்ற வெளிநாடுகள் பற்றி அறிய ஆசையாக உள்ளது. நீ சென்று வருகிறாயா?" என்று கேட்டான். "என்னால் அவ்வளவு தொலைவு போக முடியாதே!"என மைனா வருந்தியது.



கார்த்திக்கின் அப்பா புதிதாக ஒரு மடிக்கணினி வாங்கி வந்தார். இதோ, "நீண்ட நாட்களாகக் கேட்ட மடிக்கணினி" என்றார். "இதில் நீ பாடங்கள் படிக்கலாம், பாடல்கள் கேட்கலாம் ஏன், கணினி செயலிகள் மூலம் விரும்பிய இடங்களை எல்லாம் கூட பார்க்கலாம்" என்றார்.



கார்த்திக் மனம் மகிழ்ந்து தந்தையை அணைத்துக் கொண்டான். மைனாவும் கார்த்திக்கின் தோளில் அமர்ந்து உலகைச் சுற்றி பார்க்கிறது என கூறவும் வேண்டுமா!

## இவற்றைச் செய்வோம்.



### பொருள் அறிவோம்.

| | | |
|---|---|---|
| லாப்டாப் | - | மடிக்கணினி |
| ஆப் | - | செயலி |
| ஸ்மார்ட்போன் | - | திறன்பேசி |
| இண்டர்நெட் | - | இணையம் |
| பாஸ்வேர்ட் | - | கடவுச்சொல் |



**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. கார்த்திக்கின் குணநலன்கள் பற்றி கூறுக.
2. கார்த்திக் எவற்றைப் படமாக வரைவான்?
3. மடிக்கணினியால் மாணவர்களுக்குப் பயன் என்ன?
4. உன்னிடம் மைனா பறவை பேசினால் நீ என்ன பேசுவாய்?

**ஆ) சொற்களைக் கொண்டு தகுந்த சொற்றொடர்கள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| கார்த்திக் | மைனாவிடம் | பேசினான். |
| மைனா | கார்த்திக்கிடம் | பார்த்தான். |
| அப்பா | மடிக்கணினி | கொடுத்தார். |
| | மலைக்கு | பேசியது. |
| | மலையை | சென்றது. |





----------------------------------------------------------------

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

**இ) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு கதை ஒன்றை உருவாக்கி வகுப்பில் கூறவும்.**

(மரம், ஆறு, எறும்பு, புறா, இலை)

ஈ) **கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை சரியான வண்ணத்துப் பூச்சிகளில் எழுதுக.**

பெட்டி, ஓடினான், பூ, பேனா, படித்தான், தேடினான்



பெயர்கள்



செயல்கள்

ஈ) **பெயர்ச் சொற்களை சரியான கட்டத்தில் எடுத்து எழுதுக.**

மும்பை, ஏப்ரல், இலை, நாற்காலி, ஓடுதல், பென்சில், நிமிடம், விளையாட்டுத்திடல், விரல், இனிப்பு, எழுதுதல், வட்டம்.

| | | |
|---|---|---|
| பொருள்பெயர் | பென்சில் | ............. |
| இடப்பெயர் | ............. | மும்பை |
| காலப்பெயர் | ஏப்ரல் | ............. |
| சினை பெயர் | ............. | இலை |
| பண்புப்பெயர் | இனிப்பு | ............. |
| தொழிற்பெயர் | ............. | ஓடுதல் |

ஆசிரியர் குறிப்பு: • மாணவர்களுக்கு பிடித்த கதைகளைக் கூறச் சொல்லவும். அக்கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் நிறை, குறைகளைப் பற்றி கலந்துஉரையாடக் கூறவும். • செய்தித் தாளில் வரும் வெளிநாடு குறித்த செய்திகளை வாசிக்க கூறவும். அந்நாடுகள் பற்றிய அதிக தகவல்களை பெற்றோர் உதவியுடன் தேடி எழுதி வரச்சொல்லவும்.



# 10. திருக்குறள்



## கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

**பொருள்:** ஒருவன் கற்க வேண்டிய நூல்களைத் தவறின்றி கற்க வேண்டும். அதன்பின் அந்நூல்களில் சொல்லப்பட்ட நெறியின் வழியில் நடத்தல் வேண்டும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

**பொருள்:** மணற்கேணியில் தோண்டிய அளவுக்கு ஏற்ப நீர் ஊறும். அது போல மக்களுக்கு அவர்கள் கற்ற அளவுக்கு ஏற்ப அறிவு பெருகும்.

## ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**பொருள்:** ஒழுக்கம் எல்லோர்க்கும் சிறப்பினைக் கொடுக்கும். எனவே அதனை உயிரை விட மேலானதாக கருதிப் போற்ற வேண்டும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**பொருள்:** நல்லொழுக்கமானது நன்மைக்குக் காரணமாகும்; தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே கொடுக்கும்.



## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இடும்பை | - | துன்பம் |
| 2. | கேணி | - | கிணறு |
| 3. | கசடற | - | தவறின்றி |
| 4. | விழுப்பம் | - | மேன்மை |

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. எது உயிரைவிட மேலாகக் கருதப் படுகிறது?
2. ஒழுக்கம் என்ன தரும்?
3. கற்பதை எவ்வாறு கற்க வேண்டும்?
4. திருவள்ளுவர் சிலையை நீ பார்த்த அனுபவத்தை 5 அல்லது 6 வாக்கியங்களில் கூறுக.

### ஆ) பின்வரும் திருக்குறளை அடிப்பிறழாமல் எழுதவும்.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

   ................................................................................................

   ................................................................................................

### இ) ஒத்த ஓசைச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| 1. கற்க ............ | 2. நல்லொழுக்கம் ............ |
| 3. தரும் ............ | 4. என்றும் ............ |

### ஈ) கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. ஒழுக்கம் ..............................................................................
2. அறிவு ..................................................................................
3. நன்றி ..................................................................................

ஆசிரியர் குறிப்பு: 'திருக்குறள் கதைகள்' புத்தகத்தை பள்ளி நூலகத்திலிருந்து எடுத்து வாசிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும். பின்னர் வாசித்த கதைகளைச் சொந்த மொழியில் கூற வாய்ப்பளிக்கவும்.

உ)  பத்தியை வாசித்து கேள்விகளுக்கு விடை அளிக்கவும்.



திருக்குறளை இயற்றிய தமிழ் புலவர் திருவள்ளுவர் ஆவார். இவரது காலம் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் கடைச்சங்க காலம் என நம்பப்படுகிறது. இவரை தெய்வப் புலவர், பொய்யில் புலவர், முதல் பாவலர் என்றெல்லாம் சிறப்பித்து கூறுகின்றனர். இரண்டே வரியில் மனித வாழ்வுக்குத் தேவையான நன்னெறிகளை கூறும் நூல் திருக்குறள் ஆகும். தமிழ்நாட்டின் தென்கோடி முனையில் உள்ள கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் சிலை எழுப்பி அவரை தமிழக அரசு பெருமைப் படுத்தி உள்ளது.

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
2. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் எது?
3. திருவள்ளுவரின் வேறு பெயர்கள் எவை?
4. திருவள்ளுவர்க்கு எங்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது?

**செயல் திட்டம்:** திருக்குறளைப் பற்றிய தகவல்களை இணையத்தில் தேடி வாசிக்கவும். அத்தகவல்களை வண்ணத்தாளில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

பேருந்து மற்றும் சாலை விதிகள்

**வாசிப்புப்பகுதி**



பாதுகாப்பான பயணம் – மகிழ்வான பயணம்



தாமதம் ஆகிறது என சாலையில் ஓடக்கூடாது. வீட்டிலிருந்து சரியான நேரத்தில் கிளம்ப வேண்டும்.



பேருந்து வந்ததும் ஒருவரை ஒருவர் முந்தி தள்ளிக்கொண்டு ஏற முயல்வது ஆபத்து.



பேருந்தில் ஏறியதும் இருக்கையில் அமர வேண்டும்.



பேருந்து நின்றவுடன் வரிசையில் நின்று பொறுமையாக ஒவ்வொருவராக ஏற வேண்டும்.



பேருந்தின் உள்ளேயும், வெளியேயும் குப்பைகளைப் போடக்கூடாது.



பேருந்தில் ஜன்னலில் இருந்து வெளியே எட்டிப் பார்க்கக்கூடாது. கைகளை வெளியில் நீட்டக்கூடாது.

# 11. இயற்கையோடு நட்பு

அலகு - 3

## பாடி மகிழ்வோம்!

மழையை நம்பி ஏலேலோ!
மண்ணிருக்க ஜலசா!

மண்ணை நம்பி ஏலேலோ!
விதை இருக்க ஜலசா!

விதையை நம்பி ஏலேலோ!
மரம் இருக்க ஜலசா!

மரத்தை நம்பி ஏலேலோ!
கிளை இருக்க ஜலசா!

கிளையை நம்பி ஏலேலோ!
இலை இருக்க ஜலசா!

இலையை நம்பி ஏலேலோ!
பூ இருக்க ஜலசா!

பூவை நம்பி ஏலேலோ!
காயிருக்க ஜலசா!

காயை நம்பி ஏலேலோ!
கனி இருக்க ஜலசா!

கனியை நம்பி ஏலேலோ!
நாம் இருக்க ஜலசா!

இயற்கையோடு ஏலேலோ – நாம்
இணைந்து வாழ்வோம் ஜலசா!





## இவற்றைச் செய்வோம்.

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. மழை எதனை நம்பி இருக்கிறது?
2. மரத்தின் பாகங்களாக நீ எவற்றைப் பார்க்கிறாய்?
3. காயிலிருந்து கனி வருமா? கனியிலிருந்து காய் வருமா?
4. மழை பெய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

### ஆ) சிந்தித்து எழுதுக.

1. வீட்டில் செடிகளை எப்படி வளர்க்கலாம்?

.........................................................................................

2. நீ உண்ணும் கனிகள் எங்கிருந்து கிடைக்கின்றன?

.........................................................................................

### இ) படத்தில் நீ பார்ப்பவற்றை வருணனை செய்து கூறுக.



**ஆசிரியர் குறிப்பு:** நாட்டுப்புற பாடல்களை பெற்றோர் உதவியுடன் இணையத்தில் தேடி வகுப்பறையில் பாடிக்காட்டக் கூறவும். அறிமுகமற்ற சொற்களின் பொருள்களைக் கேட்டு அறியக் கூறவும்.

ஈ) கீழ்க்காணும் சொற்களின் தொடர்பை பாடலில் வரும் வரிசைப்படி எழுதுக.

(காய், மண், கிளை, பூ, விதை, மரம், மழை, இலை, கனி)




உ) உரையாடலை வாசித்து விடை கூறுக.

**கண்ணன்:** மாமா! எங்கே செல்கிறீர்கள்?

**மாமா:** மரங்கள் நட செல்கிறேன்.

**கண்ணன்:** உங்கள் கையில் மரக்கன்றுகள் இல்லையே?

**மாமா:** இதோ, இவை விதைப் பந்துகள், இதை ஆங்காங்கே காடுகளில் வீசி விட்டு வருவேன்.

**கண்ணன்:** விதைப்பந்துகளா? அப்படி என்றால்?

**மாமா:** பழங்களின் விதைகளை நன்றாக மண்ணில் கலந்து வெயிலில் காய வைத்து அதை விதைப்பந்துகளாக மாற்றுவேன். அதை காடுகளில் வீசி மரங்கள் வளர சுற்றுப்புற சூழலுக்கு உதவுவேன்.

**கண்ணன்:** அப்படியா! நல்ல கருத்தாக உள்ளதே! நானும் உங்களோடு வருகிறேன் மாமா!

1. உரையாடலில் பங்கு பெற்றவர்கள் யார்? யார்?
2. விதைப்பந்துகள் என்றால் என்ன?
3. விதைப்பந்துகளை எங்கே வீசுவதாக மாமா கூறினார்?

★ செயல் திட்டம்.

சுற்றுச் சூழல் தினம் பற்றிய சுவரொட்டிகள், முழக்க வாக்கியங்கள் எழுதி வகுப்பறையில் காட்சிப் படுத்தவும்.

## மொழியை அறிவோம்.

திணையின் உட்பிரிவே பால் ஆகும். பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்ற பெயரும் உண்டு. பால் ஐந்து வகைப்படும்.

### உயர்திணை



கபிலன் – ஆண்

ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்



கமலி – பெண்

ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால் எனப்படும்



சிறுவர் – பலர்

ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்

### அஃறிணை



மரம் – ஒன்று

பகுத்தறிவு இல்லாத உயிரினம் அல்லது உயிரற்ற பொருள் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றின்பால் ஆகும்.



மரங்கள் – பல

பகுத்தறிவு இல்லாத ஒன்றுக்கு மேற்பட்ட உயிரினங்கள் அல்லது உயிரற்ற பொருள்களை குறிப்பது பலவின்பால் ஆகும்.

# 12. தொப்பி யாருக்கு?

## வாசிப்போம் மகிழ்வோம்!



ஒரு காட்டில் ஓர் ஆலமரம் இருந்தது. அதில் பல பறவைகளும் அதன் கீழே சில விலங்குகளும் வாழ்ந்து வந்தன. மரத்தின் அடியில் இருந்த பொந்து ஒன்றில் முயல் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒருநாள் முயலுக்கு அழகான சிவப்பு நிற தொப்பி ஒன்று கிடைத்தது. தொப்பியைக் கண்ட மற்ற விலங்குகள்,“முயலே! முயலே! தொப்பியை எங்களுக்குத் தா” என்று கேட்டன.



















முயலுக்கு பிடித்த உணவு என்ன? முயல் தொப்பியை யாருக்கு கொடுத்திருக்கும்?



## இவற்றைச் செய்வோம்.

**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. முயலுக்கு எந்த நிற தொப்பி கிடைத்தது?
2. யானை என்ன கொண்டு வந்தது?
3. உன் தொப்பியின் நிறம் என்ன? அதன் பயன் என்னவென்று கூறுக.

**ஆ) விடுபட்ட சொற்களை பாடத்திலிருந்து கண்டுபிடித்து எழுதுக.**

1. காட்டில் ஓர் .................................. இருந்தது.
2. முயலுக்கு ................................ தொப்பி கிடைத்தது.
3. குரங்கு ...................... அடுக்கி வைப்பேன் என்றது.

**இ) எந்த காலத்தில் எந்த உடை அணிய வேண்டும்?**

(குளிர்காலம், மழைகாலம், கோடைகாலம்)

  

________ ________ ________

**ஈ) அழகான, நீலவண்ணக் குடை ஒன்று கீழே கிடைத்தால் என்ன செய்வாய்? என எழுதுக.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## உ) பாடலை வாசித்து கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

பட்டை தீட்டத்தீட்டத் தான்
பளபளக்கும் வைரமே!
மெருகு ஏற்றஏற்றத் தான்
மினுமினுக்கும் தங்கமே!
அரும்பு மலரமலரத் தான்
மணமளிக்கும் மலருமே!
அன்பு பெருகப்பெருகத் தான்
அமைதி பெறும் உலகமே!



1. வைரம் எப்பொழுது பளபளக்கும்?

..............................................................................................

2. உலகம் எப்பொழுது அமைதி பெறும்?

..............................................................................................

## ஊ) படத்தையும் சொற்களையும் இணைத்து சொற்றொடர்களை கூறுக.

| | | |
|---|---|---|
|  கனைக்கும் |  பிளிறும் |  முழங்கும் |
|  சீறும் |  குரைக்கும் |  அகவும் |

**செயல்திட்டம்:** கிராமியப்பாடல், கும்மிபாடல்களை இணையத்தில் தேடி வகுப்பில் குழுவாக பாடி மகிழவும். பள்ளி நிகழ்ச்சி நேரங்களில் இப்பாடல்களோடு நடனமும் ஆடி மகிழவும்.

## ஒலிக் குறிப்புச் சொற்கள்

ஒலியை வெளிப்படுத்தும் சொற்கள் ஒலிக்குறிப்புச் சொற்கள் எனப்படும். அதாவது ஒரு விலங்கு, பறவையின் அழைப்பு அல்லது பொருள் எழுப்பும் ஒலிகளை குறிக்கும் சொற்கள் ஒலிக்குறிப்புச் சொற்கள் எனப்படும். இப்போது படங்களைப் பாருங்கள். ஒலிக்குறிப்புச் சொற்களை எழுதுங்கள்.





டம்டம்

























# 13. பரிசு

வாசிப்போம்! மகிழ்வோம்!






என் பெயர் கல்யாணி. நான் மூன்றாம் வகுப்பில் பயில்கின்றேன். எனக்கு ஓவியங்கள் வரையவும் புத்தகங்கள் படிக்கவும் பிடிக்கும். பள்ளி நூலகத்திலிருந்து எனக்குப் பிடித்த புத்தகங்களை எடுத்து வாசிப்பது எனது வழக்கம்.

எங்கள் பள்ளியில் ஓவியப்போட்டியில் முதல் பரிசாக புத்தகம் ஒன்றைப் பெற்றேன். 'வார்லி ஓவியங்கள்' என்பது அப்புத்தகத்தின் பெயர். செம்மண் நிற முன் அட்டையில் தங்க நிற எழுத்துகளில் தலைப்பானது எழுதப்பட்டு இருந்தது. தலைப்பைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் சிறிய கோட்டு ஓவியங்கள் அழகாக வரையப்பட்டு இருந்தன. புத்தகத்தின் முன் அட்டை மனதைக் கவரும் வகையில் அருமையாக இருந்தது. புத்தகத்தின் பின் அட்டையில் நூல் ஆசிரியர் புகைப்படமும் அவரைப் பற்றிய விவரங்களும் கொடுக்கப்பட்டு இருந்தன.





எனது பெற்றோரிடம் புத்தகத்தைக் காட்டிக்காட்டி மனம் மகிழ்ந்தேன்.

புத்தகத்தைத் திறந்து பார்த்தேன். திகைத்துப் போனேன். ஒவ்வொரு பக்கத்திலும் வியக்கத்தக்க வகையில் அற்புதமான வார்லி கோட்டு ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தன.

வட்டங்கள், முக்கோணங்கள், சதுரங்கள் போன்ற எளிமையான வடிவங்களைக் கொண்டு பல காட்சிகள் வரையப்பட்டு இருந்தன. என்னைப் போன்ற சிறுவர், சிறுமியர் எளிதாக வரைய முடியும். எனது ஓவிய நோட்டில் இப்படங்களை வரைந்தேன். இப்புத்தகத்தை பரிசாக தந்த எனது ஆசிரியர்களுக்கு நன்றி கூறினேன்.





## இவற்றைச் செய்வோம்.

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. கல்யாணிக்கு பரிசாக கிடைத்த புத்தகத்தின் பெயர் என்ன?
2. புத்தகத்தின் முன் அட்டையில் என்னென்ன இருந்தன?
3. புத்தகத்தின் பின் அட்டையில் என்னென்ன தரப்பட்டிருந்தன?

### ஆ) கேள்விகளை வாசித்து விடைகளை எழுதுக.

1. கல்யாணி எந்தப் போட்டியில் பரிசு பெற்றாள்?

.............................................................................................

2. உன்னுடைய பொழுதுபோக்கு என்ன?

.............................................................................................

3. உனக்கு பரிசாக கிடைத்தப் பொருள்கள் எவை?

.............................................................................................

### இ) பானையை வருணித்து 4 அல்லது 5 வரிகள் எழுதுக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................



### ★ செயல் திட்டம்:

உனது நண்பன் / தோழியின் பிறந்த நாளில் வார்லி ஓவியங்களைப் பயன்படுத்தி வாழ்த்து அட்டை உருவாக்கி பரிசாகத் தரவும்.

**ஆசிரியர் குறிப்பு:** செய்தித்தாளில் வரும் படக்கதைகள், சிறுவர் பாடல்கள், புதிர்கள் போன்றவற்றை சேகரித்து தொகுப்பேடு உருவாக்கவும்.

★ **புத்தகத்தைப் பார்ப்பேன். முன் அட்டை, பின் அட்டையில் உள்ள விவரங்களைக் கூறுவேன்.**

சிறுவர் நீதிக்கதைகள்





எழுத்தாளரைப் பற்றி .....

பெயர்: திரு. சுதாகர்

தொழில் : எழுத்தாளர், ஓவியர்

எழுதியுள்ள நூல்கள் :

★ சிறுவர் நீதிக்கதைகள்,

★ 100 நன்னெறி கதைகள்.

பெற்ற விருதுகள் :

★ சிறந்த ஓவியருக்கான 2024 ஆம் ஆண்டின் மாநில அரசு விருது.

★ சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான 2023 ஆம் ஆண்டின் விருது.

மின் அஞ்சல்: .............

1. முன் அட்டையை வருணனை செய்யவும்.
2. எழுத்தாளரின் பெயர் என்ன?
3. இப்புத்தகத்தின் முக்கிய கருத்து யாது?

★ **செயல் திட்டம்:**

பள்ளி நூலகத்தில் படித்த புத்தகத்தின் கதையை உன் நண்பர்களுக்குக் கூறுக.

★ ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார். அவருக்கு நான்கு மகன்கள் இருந்தனர்.......

# 14. அலைபேசி

## பாடி மகிழ்வோம்!



ரிங் ரிங் ரிங் ரிங்
மணி ஒலிக்குது பார்!
அலைபேசி ஒளி வீசி
உனை அழைக்குது பார்!
சொந்த பந்தம் அனைவரோடும்
பேசி மகிழலாம்!
செல்லும் இடம் எல்லாம் அதை
எடுத்துச் செல்லலாம்!



பள்ளிக்கூட பாடங்களை
பயின்றும் மகிழலாம்!
உலக செய்தி உள்ளூர் செய்தி
என்ன வாயினும்!
உடனுக்குடன் அதன் வழியே
அறிந்து கொள்ளலாம்!



மதிமயங்கி மணிக்கணக்கில்
பயன்படுத்தாதே!
மன நலனை உடல்நலனைக்
கெடுத்துக் கொள்ளாதே!
திறன் அறிந்து பயன் உணர்ந்து
பயன்படுத்தினால்!
அனைவருக்கும் அவசியமே
அலைபேசி தான்!





## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

1. மதி = அறிவு, நிலா
2. திறன் = ஆற்றல்

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. உன் வீட்டில் யார் யாரிடம் அலைபேசி உள்ளது?
2. நாம் அலைபேசியை எதற்கெல்லாம் பயன் படுத்துகிறோம்?
3. நீ அலைபேசியில் கேட்ட பாடல் ஒன்றைப் பாடு.
4. அலைபேசியை அதிகம் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

### ஆ) விடையை எழுதுக.

1. அலைபேசியை கல்வி கற்க எவ்வாறு பயன்படுத்தலாம்?
2. நீ யார் யாருடைய அலைபேசி எண்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்?

### இ) கலந்துரையாடுவோம் வாருங்கள்.

அலைபேசியின் நன்மை மற்றும் தீமைகளைப் பற்றி வகுப்பில் இரு குழுக்களாகப் பிரிந்து விவாதிக்கவும்.



### ஈ) கணினியைப் பற்றி உன் சொந்த மொழியில் கவிதை ஒன்று எழுதுக.

..........................................................................................

..........................................................................................

### உ) வகுப்பில் செய்தித்தாளில் உள்ள தலைப்புச் செய்திகளை உரக்க வாசிக்கவும்.

## ஊ) எது சரி / தவறு என கட்டத்தில் குறியிடுக.



ஸ்கூட்டர் ஓட்டும்பொழுது
அலைபேசியில் பேசுதல்




சாலையை கடக்கும் போது
அலைபேசியில் பேசுதல்




ஆபத்து நேரத்தில்
பெற்றோரை அழைத்தல்



ஆசிரியர் அனுப்பிய
பயிற்சிகளைப் பார்த்தல்

## எ) சொற்களைப் பொருள்பட இணைத்து எழுதுக.

| அ | ஆ |
|---|---|
| 1. இராஜன் | 1. ஆடினாள். |
| 2. இராணி | 2. ஓடியது. |
| 3. சிறுவர் | 3. வரைந்தான். |
| 4. அணில் | 4. பாடினர். |
| 5. பறவைகள் | 5. பறந்தன. |

1. ...................................
2. ...................................
3. ...................................
4. ...................................
5. ...................................




★ இவர்கள் என்ன செய்கிறார்கள்? என நிரப்புக.

★ ஆடுகிறாள்



★.............................



★.............................



★.............................





- பறவை கிளையில் உட்கார்ந்திருக்கிறது.
- குமரன் ஓடுவான்.
- நாய் குரைத்தது.
- வள்ளி பாடினாள்.



அடிக்கோடிட்ட சொற்கள் செயலைக் குறிக்கின்றன.

ஒரு பொருள் அல்லது ஒரு நபர் செய்யும் செயலை குறிக்கும் சொல் **வினைச்சொல்** ஆகும்.

★ அடைப்புக்குறிக்குள் உள்ள வினைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(விளையாடுகின்றனர், படிக்கின்றார்கள், செல்கிறாள், நடக்கிறேன்)

1. நான் மாலையில் ..................................
2. வசந்தி பள்ளிக்கு ..................................
3. மாணவர்கள் கிரிக்கெட் ..........................
4. அவர்கள் பாடம் ....................................

# 15. புனே சிற்றுலா

## உரையாடுவோம்! வாருங்கள்!

மாணவர்கள்: வணக்கம் ஐயா.

ஆசிரியர்: அனைவருக்கும் வணக்கம்! தீபாவளி விடுமுறையில் என்னென்ன செய்தீர்கள்?

மாணவர்கள்: தீபாவளியை நன்றாக கொண்டாடினோம் ஐயா. குடும்பத்தோடு சுற்றுலா சென்று வந்தோம் ஐயா.

ஆசிரியர்: நல்லது, இப்பொழுது ஒவ்வொருவராக நீங்கள் பார்த்த இடங்களைப் பற்றிக் கூறுங்கள்.

வசந்த்: நான் முதலில் சொல்லட்டுமா?

ஆசிரியர்: சரி! சொல் வசந்த்.

வசந்த்: தீபாவளி விடுமுறையில் என் பெற்றோருடன் புனேயில் உள்ள எனது மாமா வீட்டிற்குச் சென்றோம்.

ஆசிரியர்: புனேயில் நீ பார்த்த இடங்கள் பற்றிய விவரங்களைச் சொல்!

வசந்த்: தீபாவளி முடிந்த அடுத்த நாள் நாங்கள் முதலில் 'லால் மஹால்' சென்றோம்.



பீட்டர்: அதன் சிறப்பு என்ன?

வசந்த்: சத்ரபதி சிவாஜி மஹாராஜ் தன் இளமைப் பருவத்தில் தன் தாயாருடன் வாழ்ந்த இடமாம் அது! பின்னர் 'சனிவார் வாடா' என்ற பெரிய கோட்டையைப் பார்த்தோம். அங்கு நடைபெறும் ஒலிஒளி காட்சியை கண்டு களித்தோம்.

அமுதா: பிறகு எங்கு சென்றீர்கள்?



வசந்த்: அடுத்த நாள் 'டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அருங்காட்சியகம்' சென்றோம். சிறிய குன்றின் மேல் இருந்த அந்த அருங்காட்சியகம் மிகவும் அழகாக இருந்தது. அங்கே அவர் பயன்படுத்திய பொருள்கள், புகைப்படங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.



மேரி: வேறு எங்கெல்லாம் சென்றீர்கள்?

வசந்த்: பிறகு 'சின்ஹகட் கோட்டை'க்குச் சென்றோம்.

அங்கு தானாஜி மாலுசரேவின் வீரத்தைப் பற்றி அறிந்து கொண்டோம். கோட்டையைச் சுற்றிப் பார்த்த பிறகு ஓய்வாக அமர்ந்தோம். அப்பொழுது சுட சுட வெங்காய பஜ்ஜியும் சிறுமண் பானையில் தயிரும் சாப்பிட்டோம். அருமையாக இருந்தது.



பீட்டர்: புகைப்படம் எடுத்தீர்களா?

வசந்த்: என் மாமாவின் திறன்பேசியில் புகைப்படம், காணொளி எல்லாம் எடுத்தோம். ஆசிரியர் அனுமதி கொடுத்தால் நாளை கொண்டு வருவேன்.

ஆசிரியர்: அவசியம் கொண்டு வா, கணினி திரையில் எல்லோரும் பார்க்கலாம்.

ஆசிரியர் குறிப்பு: மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் பற்றி கலந்துரையாட வாய்ப்பும் பயிற்சியும் தரவும்.

## இவற்றைச் செய்வோம்.



அ) பேசுவோம் வாருங்கள்.

1. வசந்த் புனேவில் யார் வீட்டிற்குச் சென்றான்?
2. வசந்த் புனேயில் பார்த்த இடங்கள் யாவை?
3. இப்பாடத்தில் கலந்துரையாடலில் பங்கு கொண்ட மாணவர்களின் பெயர்களைக் கூறுக.

ஆ) சொற்றொடர்களை வாசித்து வரிசைப் படுத்தி எண்களை கட்டத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. | வசந்த் முதலில் 'லால் மஹால்' என்ற இடத்திற்குச் சென்றான். | |
| 2. | சின்ஹகட் இடத்தில் தானாஜி மாலுசரே அவர்களது வீரத்தைப் பற்றி மாமா கூற அறிந்துக் கொண்டான். | |
| 3. | பின்னர் 'சனிவார் வாடா' என்னும் கோட்டைப் பகுதிக்கு சென்றான். | |
| 4. | வசந்த் தன் பெற்றோருடன் தீபாவளி விடுமுறையில் புனே சென்றான். | |
| 5. | அடுத்த நாள் டாக்டர் அம்பேத்கர் அருங்காட்சியகம் சென்றான். | |
| 6. | அம்பேத்கர் அருங்காட்சியகம் பார்த்த பின்னர் சின்ஹகட் என்ற கோட்டைப் பகுதிக்குச் சென்றான். | |

இ) நீ பெற்றோருடன் எந்த ஊருக்கு சென்றுள்ளாய்? உன் அனுபவத்தைப் பற்றி கூறுக.

ஈ) சொற்றொடர்களை ஆசிரியர் சொல்லக் கேட்டு தகுந்த நிறுத்தற் குறிகளுடன் எழுதுக.

# தாத்தாவுக்கு கடிதம்

**வாசிப்புப்பகுதி**





அன்புள்ள தாத்தாவுக்கு,

நாங்கள் இங்கே நன்றாக இருக்கிறோம். நீங்கள் அங்கே எப்படி இருக்கிறீர்கள்? பாட்டிக்கு எனது வணக்கத்தை தெரிவியுங்கள். தாத்தா! பாட்டி, நான் மூன்றாம் வகுப்பு பயில்கிறேன். தினமும் பள்ளிக்குச் செல்கிறேன்.

பள்ளியில் மகிழ்ச்சியாக கதைகள் கேட்போம். பாடல்கள் பாடுவோம். பாடங்களும் படிக்கிறோம். அப்பாடல்களையும் கதைகளையும் வீட்டில் தம்பிக்குக் கூறுவேன். அவனும் பள்ளிக்கு வர விரும்புகிறான்.

நீங்கள் மும்பைக்கு எப்போது வருவீர்கள்? தங்களைப் பார்க்க ஆசையாக உள்ளது.

உங்கள் பேத்தி
இனியா





# 16. தெனாலிராமன்

அலகு - 4

விஜய நகர பேரரசின் தலைசிறந்த பேரரசர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் ஆவார். அவரது அரசவையில் புகழ்பெற்ற எட்டு கவிஞர்கள் இருந்தனர். அவர்களுள் சமயோஜித புத்தியிலும் புலமையிலும் தலைசிறந்தவர் தெனாலிராமன் ஆவார். ஒருநாள் அரசவைக்கு சிங்கமுத்து புலவர் என்ற ஒருவர் வந்தார்.







சிங்கமுத்து புலவர் பல்வேறு மொழிகளில் பேசி தன் புலமையை காட்டினார்.




பேரரசரின் முன்னால் சிங்கமுத்து புலவர் ஆணவத்துடன் பேசியதைக் கேட்டு அவையோர் அதிர்ச்சியுற்றனர். பேரரசர் அவையில் இருந்த கவிஞர்களை நோக்கி தனது பார்வையைச் சுழல விட்டார். அப்போது தெனாலிராமன் எழுந்து









எவ்வளவு யோசித்தும் புலவருக்கு அது என்னவென்று விளங்கவில்லை. விளக்கம் கூற இரண்டு நாள் அவகாசம் கேட்டார்.

மூன்றாம் நாள் அவையோர் புலவரின் வரவை எதிர்நோக்கி காத்திருந்தனர். அப்போது அரசவை காவலர் வந்து நேற்று இரவே அவர் நாட்டை விட்டுச் சென்றுவிட்டார் என்று கூறினார். அவையோர் நிம்மதி பெருமூச்சு விட்டனர். அப்போது பேரரசர் இதற்கு விளக்கம் எங்களுக்கும் புரியவில்லை கூறுங்கள் என்றார். தெனாலிராமன் சிரித்துக்கொண்டே.....




ஒரு நாள் எலி ஒன்று குடிசையின் மீது படர்ந்து இருந்த பூசணிக்காயின் காம்பை நறுக், நறுக் என கடிப்பதைப் பார்த்தேன்.




அத்துடன் அப்பூசணி காம்பிலிருந்து விடுபட்டது.



அதனால் பூசணிக்காய் கூரையில் இருந்து சரசரவென வழுக்கியது.




அவ்வாறு சறுக்கிய பூசணி 'டபக்' என தரையில் விழுந்தது. அந்த சப்தத்திற்கு கூரையின் கீழே நின்ற ஆட்டுக்குட்டி 'மே' என கத்தியபடியே ஓடியது.




"இந்த மொத்த கதையையும் சேர்த்து 'நறுக், நறுக் சர சர டபக் மே' என சுருக்கமாகக் கூறினேன் மகாராஜா" என்றார். பேரரசர் உட்பட அவையோர் அனைவரும் கலகல வென சிரித்தனர்.



பேரரசர் மகிழ்ச்சி அடைந்து தெனாலியை கட்டி அணைத்துக் கொண்டார். அதோடு மட்டுமில்லாமல் நூறு பொற்காசுகளைப் பரிசாகவும் அளித்தார்.

**ஆசிரியர் குறிப்பு:** இக்கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டக்கூறவும். குழுச்செயல்களில் பங்கேற்கும் பொழுது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பற்றிக் கூறவும்.

## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

1. ஆரவாரம் = பேரொலி
2. ஆணவம் = அகந்தை
3. சமயோஜித = நேரத்திற்கு தகுந்த

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. கதைகளை உனக்கு யார் சொல்வார்கள்?
2. உனக்கு எந்த மாதிரி கதைகள் பிடிக்கும்?
3. சிங்கமுத்து புலவர் எப்படிப்பட்டவர் என நீ நினைக்கிறாய்?
4. தெனாலிராமனின் கதை உனக்கு பிடித்ததா? அதற்கு காரணம் என்ன?

### ஆ) சிந்தித்து எழுதுக.

1. சிங்கமுத்து புலவர் எத்தனை நாள்கள் அவகாசம் கேட்டார்?

......................................................................................

......................................................................................

......................................................................................

2. தெனாலிராமனின் விளக்கம் குறித்த உன் கருத்தை எழுதுக.

......................................................................................

......................................................................................

......................................................................................

### இ) சொற்றொடர்களை உருவாக்குவேன். எழுதுவேன்.

| | |
|---|---|
| அவன் | விளையாடியது. |
| அவள் | விளையாடினான். |
| அது | விளையாடினாள். |

1. ......................................................................................
2. ......................................................................................
3. ......................................................................................



# 17. கூட்டப் பெயர்கள்

## பாடி மகிழ்வோம்!



கூட்டம் கூட்டமாய் பறவைகள்
வானில் பறந்து செல்லுமே!

கூறு கூறுகளாய் காய்கறிகளை
சந்தையில் கூவி விற்பரே!



குலைக் குலையாய் திராட்சைகள்
கொடியில் அழகாய் தொங்குமே!



சாரை சாரையாய் எறும்புகள்
தரையில் ஊர்ந்து செல்லுமே!



மந்தை மந்தையாய் மாடுகள்
புல்வெளியில் மேய்ந்திடுமே!

பள்ளிச் செல்லும் மாணவர் நாம்
பண்பாய் கூடி வாழ்வோமே!



## இவற்றைச் செய்வோம்.



### அ) பேசுவோம் வாருங்கள்.

1. பறவைகள் வானில் எவ்வாறு பறந்து சென்றன?
2. தானியங்களைக் களத்தில் எவ்வாறு குவித்து வைப்பர்?
3. காய்கறிகளை சந்தையில் எவ்வாறு வைத்திருப்பர்?
4. படைவீரர் எப்படி அணிவகுத்து செல்வர்?
5. மாணவர் நாம் எப்படி வாழவேண்டும்?

### ஆ) படத்துடன் இணைத்து எழுதுக.







| | | |
|---|---|---|
| பறவைகள் | - | பூச்செண்டு |
| தேங்காய்கள் | - | கூட்டம் |
| மலர்கள் | - | மந்தை |
| மான்கள் | - | குலை |



### இ) சொற்றொடரை அடுக்குத் தொடரால் நிரப்புவேன்.
(கூட்டம் கூட்டமாய், குவியல் குவியலாய், குலைக் குலையாய், வரிசை வரிசையாய்)

1. பனையில் நுங்குகள் .......... ............. தொங்கும்.
2. யானைகள் ............ .............. மேயும்.
3. படைவீரர் அணிவகுத்து ............. ............ செல்வர்.
4. கற்கள் ............. ............. கொட்டிக் கிடக்கும்.

## ஈ) ஒரு சொல்லோடு சொல் சேர்த்து புதிய சொல் உருவாக்குதல்.




ஆநிரை

....................

....................

....................

....................

....................

## உ) படத்தைப் பார்த்து வருணனை செய்து எழுதுவேன்.



..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஆசிரியர் குறிப்பு:** இது போன்று படங்களைப் பார்த்து தங்கள் சொந்த மொழியில் 3 அல்லது 4 வாக்கியங்கள் பேச, எழுத ஊக்கமும் பயிற்சியும் தரவும்.

- ❖ கமலா பள்ளி செல்கிறாள். அவள் நடந்து செல்கிறாள்.
- ❖ இராஜு தோட்டத்திற்கு போகிறான். அவன் அங்கே விளையாடுகிறான்.
- ❖ நான் ஒரு சிறிய பூனையைப் பார்த்தேன். அது தூங்கிக் கொண்டிருந்தது.

★ அடிக் கோடிட்டச் சொற்களைக் கவனியுங்கள்.

அவள், அவன், அது இச் சொற்கள் யாவும் பெயர்ச் சொற்களான கமலா, இராஜு மற்றும் பூனைக்குட்டிக்குப் பதிலாக எழுதப்பட்டச் சொற்கள் ஆகும்.

பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தப்படும் சொல் பதிலிப்பெயர்ச்சொல் ஆகும்.

★ பதிலிப் பெயர்ச்சொற்களை வட்டமிட்டுக் காட்டுக.

1. கண்ணன் கோவிலுக்குச் சென்றான். அங்கே அவன் யாரைப் பார்த்தான்?
2. மாமரம் எங்கே உள்ளது? அது வீட்டின் வெளியே உள்ளது.
3. விமலா மருந்தகம் சென்று அவளுக்குத் தேவையான மருந்தை வாங்கினாள்.

★ பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக பொருத்தமான பதிலிச் சொல்லை எழுதுக.

அஸ்வின் என் நண்பன். அஸ்வின் என்னுடன் மூன்றாம் வகுப்பில் படிக்கிறான். அஸ்வின் அக்கா பெயர் திலகா. திலகா வீட்டில் ஒரு நாய் இருக்கிறது. நாய் மிகவும் அழகாக இருக்கும். நான் அஸ்வின் வீட்டிற்கு மாலையில் செல்வேன். நாய் என்னைப் பார்த்து ஓடி வரும்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

# 18. ஆழ்கடல் அதிசயங்கள்

கலந்துரையாடுவோம் வாருங்கள்!

(ஆசிரியை வகுப்பறையின் உள்ளே வருகிறார்.)

**மாணவர்கள்:** வணக்கம் தமிழ் அம்மா!

**ஆசிரியை:** வணக்கம் மாணவர்களே! இன்று உங்களுக்கு டிஜிட்டல் வகுப்பறையில் கடலில் உள்ள உயிரினங்களைக் காட்டப்போகிறேன். இப்போது அவற்றை டிஜிட்டல் திரையில் பார்க்கலாம்.




**முகமது:** ஆ! ஆ! எவ்வளவு பெரிய மீன், அதோ நட்சத்திர மீன் கூட இருக்குது.

**சௌரப்:** அங்கே பாருங்கள் திமிங்கலம்.

**லட்சுமி:** ஆ! சுறா மீன், பார்த்தாலே பயமாக இருக்கிறது! இதென்ன! குதிரை போல் இருக்கிறது?

**ஆசிரியை:** அதன் பெயர் கடற்குதிரை. அதன் முகம் குதிரை முகம் போல் இருப்பதால் அதற்கு அப்பெயர் வந்தது.

**மாலா:** அங்கே பாருங்கள்! அந்த விலங்கிற்கு கைகள் போல ஏதோ இருக்கிறதே.

**ஆசிரியை:** அதன் பெயர் "ஆக்டோபஸ்." அதற்கு எட்டு கைகள் போன்ற உறுப்புகள் இருக்கும். அந்த உறுப்புகளால் இரையைப் பிடிக்கும். இடம் விட்டு இடம் நகரும்.

**ஜெரோம்:** தமிழ் அம்மா! இந்த மீன்களெல்லாம் என்ன சாப்பிடும்?

**ஆசிரியை:** சிலவகை மீன்கள், அழுகிய பாசி மற்றும் கடல் தாவரங்களை உண்ணும். திமிங்கலம் போன்ற பெரிய மீன்கள் சிறிய மீன்களையே உணவாக உண்ணும்.

**ஜான்:** தமிழ் அம்மா! கடலுக்கு அடியில் இருட்டில் ஏதோ மின்னுகிறதே!

**ஆசிரியை:** அவை பவளப் பாறைகள். அவைத் தவிர ஜெல்லி மீன், லாந்தர் மீன், டெட்ரா மீன் எல்லாம் கூட ஒளிரக் கூடியவை.

**லட்சுமி:** கீழே ஏதோ நெகிழிப் பொருள்கள் மாதிரி தெரிகிறதே அம்மா.

**ஆசிரியை:** மனிதர்கள் வீசி எறிந்த நெகிழிக் கழிவுகள் தான் அவை! அந்தக் கழிவுகளால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் அவற்றை தவிர்க்கும் வழி முறைகள் பற்றி அடுத்த வகுப்பில் பார்ப்போம்.

**மாணவர்கள்:** நன்றி தமிழ் அம்மா! அருமையான பாடம்!



## இவற்றைச் செய்வோம்.

அ) **பேசுவோம் வாருங்கள்.**

1. ஆசிரியர் டிஜிட்டல் திரையில் காட்டிய கடல்வாழ் உயிரினங்கள் யாவை?
2. கடலின் கீழே ஏன் இருட்டாக இருக்கிறது?
3. உன் பள்ளியில் டிஜிட்டல் வகுப்பறை உள்ளதா? அதன் மூலம் பாடங்களைக் கற்க நீ விரும்புகிறாயா? ஏன்?

ஆ) **மீன் தொட்டியில் உள்ள இரு மீன்களின் உரையாடலை கற்பனை செய்து எழுதுக.**



மீன் 1..........................................

மீன் 2..........................................

மீன் 1..........................................

மீன் 2..........................................

இ) **டிஜிட்டல் திரையில் பார்த்த கடல்வாழ் உயிரினங்களின் பெயர்களைப் பானையில் உள்ள எழுத்துகளைச் சேர்த்து எழுதுவோம்.**




........................... ...........................

........................... ...........................

........................... ...........................

........................... ...........................

........................... ...........................

ஈ) **டிஜிட்டல் திரையில் பார்த்த உயிரினங்களைப் பற்றி கலந்துரையாடுவோம்.**

ஆசிரியர் குறிப்பு: டிஜிட்டல் திரையில் பார்த்த கடல்வாழ் உயிரினங்களைப்பற்றி இணையத்தில் தகவல்கள் சேகரித்து பேசவும் / எழுதவும்.

# 19. படி ... படி ... படி ...

## பாடி மகிழ்வோம்!



நூலைப்படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி

காலையிற்படி – கடும்பகல் படி
மாலை இரவு பொருள் படும்படி –
நூலைப்படி

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னப்படி
கற்கத்தான் வேண்டுமப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகுமென்ற ஆன்றோர் சொற்படி

– பாரதிதாசன்

## இவற்றைச் செய்வோம்.





### பொருள் அறிவோம்.

1. கல்லாதவர் = படிக்காதவர்
2. வருந்தும்படி = துன்பப்படும்படி
3. ஊன்றிப்படி = கருத்தாய்ப்படி

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. இப்பாடலை எழுதியவர் யார்?
2. இதில் எந்தச் சொல் மீண்டும் மீண்டும் வந்துள்ளது?
3. எப்படிப் படிக்க வேண்டுமென பாரதிதாசன் கூறுகிறார்?

### ஆ) விடை எழுதுக.

1. எவற்றை படிக்க வேண்டும் என பாரதிதாசன் கூறுகிறார்?

.......................................................................................

.......................................................................................

2. எப்போது படிக்க வேண்டும்?

.......................................................................................

.......................................................................................

### இ) 'படி' என்ற சொல்லின் பல பொருள்களில் சொற்றொடர்கள் அமைத்து எழுதுக.



| சொல் | பொருள் | சொற்றொடர் |
|---|---|---|
| படி | படிக்கட்டு | ......................................... |
| படி | ஓர் அளவு | ......................................... |
| படி | படித்தல் | ......................................... |

ஆசிரியர் குறிப்பு: செய்தித்தாள்களில் படங்களைப் பார்த்து செய்திகளை மற்றும் தலைப்புகளைப் பற்றி பேச, வாசிக்க கலந்துரையாட ஊக்கமும் பயிற்சியும் தரவும்.

ஈ) சிந்தித்து எழுதுக.

எழுத படிக்கத் தெரியாதவர்களுக்கு நீ எப்படி உதவுவாய்?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

உ) பின்வரும் சொற்களின் இரு பொருள்களைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| [ ] | ← | ஆடு | → | [ ] |
| [ ] | ← | மாலை | → | [ ] |
| [ ] | ← | மதி | → | [ ] |

ஊ) ஒரே பொருள் தரும் பல்வேறு சொற்களை அறிவோம்.



# 20. மூதுரை

★செய்யுளை வாசிப்போம்! பொருள் அறிவோம்!

**நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.**

**பொருள்:**

நெற்பயிருக்கு இறைக்கப்பட்ட தண்ணீரானதுவாய்க்கால் வழியாக ஓடும்போது, கரையில் உள்ள புற்களுக்கும் பயன்படுகிறது. அது போல, இவ்வுலகில் குணத்தாலும், கொடைத் தன்மையாலும் சிறந்து விளங்கும் நல்லவர் ஒருவர் இருந்தால் கூட, அவர் நிமித்தமாக அனைவருக்கும் மழை பெய்து உலகம் செழிக்க உதவுகிறது.

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கோல்? எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.**

**பொருள்:**

நற்குணமுடைய ஒருவனுக்கு நாம் ஓர் உதவி செய்தால், பதில் உதவியை அவர் எப்பொழுது நமக்கு செய்வார் என்று ஐயுற வேண்டாம். ஏனெனில், எப்படி ஒரு தென்னை மரமானது, தன் வேரால் நிலத்திலிருந்து உறிஞ்சிய நீரை நுனிப் பகுதியில் சுவையுள்ள இளநீராக்கித் தருகிறதோ, அவ்வாறே, அம்மனிதரும் தகுந்த நேரத்தில் தானாக முன் வந்து நமக்குப் பதிலுதவியை கட்டாயம் செய்திடுவார்.

– ஔவையார்

## இவற்றைச் செய்வோம்.

### பொருள் அறிவோம்.

1. தெங்கு – தென்னை
2. பொசியும் – கசியும்
3. வாய்க்கால் – கால்வாய்
4. தொல் உலகு – பழமையான உலகு

### எதிர்ச்சொல் அறிவோம்.

1. நல்லவர் X தீயவர்
2. தொன்மை X புதுமை

### அ) வினாக்களுக்கு விடை தருக.

1. நெல்லுக்கு நீர் எதன் வழியாகப் பாய்கிறது?

.........................................................................................

2. உதவி செய்பவர் எதைப் போல் இருக்க வேண்டும்?

.........................................................................................

3. மூதுரையின் ஆசிரியர் யார்?

.........................................................................................

4. 'நன்றி ஒருவர்க்குச்' – பாடலின் கருத்தை உன் சொற்களில் கூறுக. பின்னர் எழுதுக.

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

### ஆ) 'நெல்லுக்கு இறைத்த நீர்' பாடலைப் பார்த்து அடிபிறழாமல் எழுதுக.

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

# சிறுவர் மலர்

## வாசிப்புப்பகுதி



## வாசிப்போம்! மகிழ்வோம்!



### உயர உயர

சின்னச் சின்னத் தூறலாய்
தூவும் மழைத் தூறலை
எண்ணி விட முடியுமா
நீயும் நானும் தம்பியே!

### பிறந்த நாள் வாழ்த்து

26.07.2025 அன்று
8 வது பிறந்தநாள் காணும்
அமுதனை வாழ்த்துகிறோம்!



### சொற்புதிர்:






### வேறுபாடுகளைக் கண்டுபிடி





### சரவணனுக்கு முதல் பரிசு

தமிழ் மாநகராட்சி பள்ளிகளுக்கு இடையே 05.09.2026 அன்று பாட்டுப் போட்டி நடைபெற்றது. வ.உ.சி. பள்ளியில் பயிலும் மூன்றாம் வகுப்பு மாணவன் முதல் பரிசை வென்றான். 'சிறந்த இளம் பாடகன்' என்ற பட்டத்தையும் தட்டிச் சென்றான். திரு. அனிருத் அவர்கள் பரிசினையும் பட்டத்தையும் வழங்கிப் பாராட்டினார்.

# 21. ஓர் ஈயின் கதை

● வேடிக்கையான ஈயின் கதையைப் படிப்போம்! ரசிப்போம்!











ஓர் ஈ வீட்டைச் சாணியால் மெழுகும் போது தன் பெயரை மறந்துவிட்டது. எவ்வளவு முயன்றும், அதனால் நினைவு கூர முடியவில்லை. ஐயோ! இப்போது யாரிடம் கேட்பது? அது யோசித்தபடியே பறந்து சென்றது. அப்போது ஒரு குடிசைக்கு முன்னால் தோசை சுடும் ஒரு பாட்டியைப் பார்த்தது.

“பாட்டி! பாட்டி! நான் என் பெயரை மறந்து விட்டேன். என் பெயர் என்ன என்று சொல்வீர்களா?” “ஐயோ! எனக்குத் தெரியாது. நீ என் மகனிடம் கேட்டால் நன்றாக இருக்கும். அவனுக்குத் தெரிந்திருக்கலாம். அவன் அதோ அந்த மரத்தின் அடியில் உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் கேள்.”

“பாட்டி! பாட்டியின் மகனே! என் பெயர் என்ன?” எனக்குத் தெரியாது! நான் வளர்த்த மரத்திடம் கேட்டுப் பார்!

“பாட்டி! பாட்டியின் மகன்! மகன் வளர்த்த மரமே! என் பெயர் என்ன?” “எனக்குத் தெரியாது! என் மீது வாழும் பறவைகளைக் கேட்டுப் பார்!



“பாட்டி! பாட்டியின் மகன்!”மகன் வளர்த்த மரம், அந்த மரத்தில் உள்ள பறவைகளே! என் பெயரைச் சொல்லுங்கள்!” “எங்களுக்குத் தெரியாது! நாங்கள் குடித்த தண்ணீரைக் கேள்!”



பாட்டி! பாட்டியின் மகன்! மகன் வளர்த்த மரம்! மரத்தில் உள்ள பறவைகள்! பறவைகள் குடித்த தண்ணீரே! என் பெயர் என்ன?” “எங்களுக்கு என்ன தெரியும்! எங்களுக்குள் இருக்கும் மீன்களைக் கேட்டுப் பார்! ஒரு வேளை அவற்றுக்குத் தெரிந்திருக்கலாம்!”



“பாட்டி! பாட்டியின் மகன்! மகன் வளர்த்த மரம்! மரத்தில் உள்ள பறவைகள்! பறவைகள் குடித்த தண்ணீர்! அந்த தண்ணீரில் உள்ள மீன்களே! என் பெயரைச் சொல்லுங்கள்!” “எங்களுக்கு என்ன தெரியும்! எங்களைப் பிடிக்கும் மீனவரைக் கேட்டுப் பார்.”



“பாட்டி! பாட்டியின் மகன்! மகன் வளர்த்த மரம்! மரத்தில் உள்ள பறவைகள்! பறவைகள் குடித்த தண்ணீர்! தண்ணீரில் உள்ள மீன்கள்! மீன்களைப் பிடிக்கும் மீனவரே! என் பெயர் என்ன சொல்ல முடியுமா?” “எனக்குத் தெரியாது! மீனைச் சமைத்த அக்காவைக் கேள்! ஒரு வேளை அவளுக்குத் தெரிந்திருக்கலாம்!”



"பாட்டி! பாட்டியின் மகன்!"மகன் வளர்த்த மரம்!" மரத்திலிருந்த பறவைகள்! பறவைகள் குடித்த தண்ணீர்! தண்ணீரில் இருந்த மீன்கள்! மீன்களைப் பிடித்த மீனவர்! மீனைச் சமைத்த அக்காவே! என் பெயர் என்ன என்று சொல்லுங்கள்!



"எனக்குத்தெரியாது!ஒரு வேளை மீன் உண்ணும் அரசருக்குத் தெரிந்திருக்கலாம்! அவரிடம் கேளுங்கள்!"



"பாட்டி! பாட்டியின் மகன்! அவன் வளர்த்த மரம்! மரத்தில் உள்ள பறவைகள்! பறவைகள் குடித்த தண்ணீர்! தண்ணீரில் உள்ள மீன்கள்! மீன் பிடிக்கும் மீனவர்! மீன் சமைக்கும் அக்கா! மீன் உண்ணும் அரசரே! என் பெயர் என்ன என்று சொல்ல முடியுமா? எனக்கு உன் பெயர் தெரியாது. ஆனால் என் மகனான இளவரசனிடம் கேள். ஒரு வேளை அவனுக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம்."



அப்போதுதான் குட்டி இளவரசன் அந்தப்புரத்தில் இருந்து ஈ ... ஈ ... ஈ ... என அழுது கொண்டே அரசரிடம் வந்தான். அதைக் கேட்டதும் அந்த ஈக்கு, தன் பெயர் ஈ எனச் சட்டென்று நினைவிற்கு வந்தது. அதனால் அது மகிழ்ச்சியுடன் தன் சிறகுகளை விரித்து அனைவருக்கும் நன்றி கூறிவிட்டுப் பறந்து சென்றது.

இப்போது கதையும் முடிந்தது. கத்திரிக்காயும் காய்த்தது. நாம் வீட்டிற்குச் செல்வோம்.

## இவற்றைச் செய்வோம்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. மறதி என்றால் என்னவென்று சொல்லுங்கள்?
2. உங்கள் பள்ளிப் பையில் எதையாவது எடுத்து வைக்க எப்போதாவது மறந்திருக்கிறீர்களா?
3. நீங்கள் எதையாவது மறந்தால் யாரிடம் கேட்பீர்கள்?

ஆ) சிந்தியுங்கள் – விடை கூறுங்கள் – எழுதுங்கள்.

1. ஈ தன் பெயரை மறக்கும்படி என்ன வேலை செய்தது?
2. தன் பெயரை நினைவு கூர ஈ முதலில் யாரிடம் சென்றது?
3. ஈ இறுதியாகத் தன் பெயரை எப்படி நினைவு கூர்ந்தது?

இ) யார், யாரிடம் கூறியது? என்று சொல்லுங்கள் – எழுதுங்கள்.

1. "எனக்குத் தெரியாது, என் மீது வாழும் பறவைகளைக் கேட்டுப் பார்"
2. "எங்களுக்கு என்னத் தெரியும், எங்களைப் பிடிக்கும் மீனவரிடம் கேளுங்கள்."
3. "என் மகனிடம், குட்டி இளவரசனிடம் கேள்."

ஈ) ஈயின் கதையை உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் உங்கள் சொந்த வார்த்தைகளில் சொல்லுங்கள்.

உ) மாதிரிகளைக் கற்றுக் கொள்ளுங்கள் – அவற்றை போல் எழுதுங்கள். ஒன்று என்றால், ஒரு மரம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவை என்றால், மரங்கள்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| ஈ | ஈக்கள் |
| பறவை | ............ |
| ............ | மரங்கள் |
| மீன் | ............ |

★ **பத்தியைப் படியுங்கள். பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடைக்கான எழுத்தை அதற்கான பெட்டியில் குறிப்பிடுங்கள்.**

ஒரு காட்டில் பசுக்கள் மந்தையாக மேயச் சென்றன. மந்தையில் இருந்த ஒரு பசு புல்லை மேய்ந்து கொண்டே முன்னே சென்றது. சிறிது நேரத்திற்குப்பிறகு, அது அங்குமிங்கும் பார்க்கவே தன் மந்தையில் இருந்த எந்த பசுக்களையும் காணவில்லை. வழி தவறிவிட்டோமோ என்று எண்ணி, அது சோகமாகச் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வழியே வந்த ஒரு மான் கன்று அந்தப் பசுவைப் பார்த்தது. "பசுவே வழியை மறந்து விட்டாயா?" என்று கேட்டது. பசு, "ஆமாம்!" என்றது. "கவலைப்படாதே, இந்தக்காடு முழுவதும் எனக்குத் தெரியும், என்னுடன் வா!" என்று அழைத்துச் சென்றது. சிறிது தூரம் நடந்த பிறகு, அந்தப் பசு தன் மந்தையைக் கண்டது. அது மகிழ்ச்சியுடன் தன் நண்பர்களைச் சந்தித்தது. மான் கன்றுக்கு நன்றி கூறியது.

**வயது ஒரு பொருட்டல்ல. இளையவர்களும் உதவலாம்.**

**கேள்விகள்:**

1. காட்டில் மேயச் சென்றது எவை?

அ) ஆட்டு மந்தை ஆ) மான் மந்தை

இ) பசு மந்தை ஈ) புலி மந்தை ☐

2. குட்டி மான் எதைப் பார்த்தது?

அ) சிங்கம் ஆ) புலி

இ) யானை ஈ) பசு ☐

3. பசு எதற்கு நன்றி கூறியது?

அ) மான் ஆ) பசு

இ) சிங்கம் ஈ) புலி ☐

★ பத்தியைப் பார்த்து சொற்களுக்கு இடையே இடைவெளி மற்றும் நிறுத்தற்குறிகளை இட்டு உங்கள் குறிப்பேட்டில் எழுதிக் காட்டுங்கள்.

★ பத்தியில் உள்ள சொற்களுக்கு ஒத்த சொற்களைத் தருக.

நிலம் மந்தை காடு கன்று

★ பத்தியில் அடிக்கோடிட்ட சொற்களின் எதிர்ச்சொற்களைக் கண்டுபிடித்து அட்டவணைப் படுத்துக.

| அடிக்கோடிட்ட சொல் | எதிர்ச்சொல் |
|---|---|
| சிறிது | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |



**அன்பு குழந்தைகளே!**

**யாராவது ஒருவர் உங்களை தவறான முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.**

1. **உங்களை நீங்களே குறை சொல்லாதீர்கள்.**
2. **நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.**
3. **நீங்கள் போக்சோ மின்னஞ்சல் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு புகார் தெரிவிக்கலாம்.**

**நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம். நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை. ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.**




இந்த பொத்தானை அழுத்தவும்

POCSO e-box ncpcr@gov.in ல் கிடைக்கும்

**நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக்கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால் ....**

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்...
அது உங்கள் வாழ்க்கையையும் உங்கள் நண்பர்களின் வாழ்க்கையையும் மாற்றக்கூடும்.

CHILD LINE 1098 NIGHT & DAY

**துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.**

புதிய விடியலை நோக்கி

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்

# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே
बालभारती इयत्ता तिसरी (तमिळ माध्यम)
₹ 68.00